மாலைமணி

ஆசிரியர்: பி.எஸ்.இளங்கோ

ஆச்சாரியாரே போன பின் காமராஜருக்கு காங்கிரசில் என்ன வேலை?

காமராஜர் சுதந்திரா கட்சியில் சேரத் தயாரா?

நான் பெரியாரோடு சேருகிறேன்!

பெரியார் பிரிவினையை விட்டு விடவில்லை! அதற்காகவே தீ பந்தம் ஏந்தி தேசப் படத்தை எரிக்கிறார்!

துருக்கி நிகழ்ச்சிக்கு இங்கு வித்திட வேண்டாம்!

முதலமைச்சரின் குதர்க்க வாதத்திற்கு அறிஞர் அண்ணா தரும் சாட்டை!



திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகளைத் தாங்கி நற்றொண்டு புரிந்தவரும், ஆச்சாரியார் முதலமைச்சராக இருந்த காலத்தில் கொண்டு வந்த குலதர்மக் கல்வித் திட்டத்தை எதிர்த்து ஒன்பது திங்கள் சிறை தண்டனை பெற்று அதன் விளைவால் காசநோய் ஏற்பட்டு மரணமடைந்த மாவீரன் ராகவன் பெயரால் திருவல்லிக்கேணி 76வது வட்டத்தில் நடைபெற்று வரும் இராகவன் நூல் நிலையத்தின் நான்காம் ஆண்டு விழாவும் மேயர் துணை மேயர் பாராட்டு விழாவும் 30-5-60ம் நாள் மாலை, திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில் தேரடி மைதானத்தில் வெகு சிறப்பாக நடைப்பெற்றது.

இந்தப் பகுதியில் கூட்டம் நடத்துவதற்காக கடந்த நான்கு ஆண்டுகளாக முயற்சித்தும் ஒரு சிலரின் எதிர்ப்பால் தடைப்பட்டு இப்பொழுது நடப்பதற்கு அனுமதி பெற்று பகுதி முழுதும் மின் விளக்குகளாலும் தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டு சீரும் சிறப்புடனும் மன்ற நிர்வாகிகளால் நடத்தப்பட்டது.

இதைக் கண்டு மனம் தாளாத மாற்றார் கடைசி நேரத்தில் கூட்டத்தை தடைப்படுத்த மின்சார அதிகாரிகளிடத்தில் புகார் செய்து கூட்டம் நடைபெறா வண்ணம் செய்ய முயற்சித்தார்கள் ஆனால் மன்ற நிர்வாகிகளின் நன் முயற்சியால் கூட்டம் மிக சிறப்புடன் நடைப்பெற்றது.

கூட்ட ஆரம்பத்தில் கே. ஆர். மாசிலாமணி அவர்கள் குழுவினரால் நாதஸ்வர இன்னிசை விருந்து நடத்தப்பட்டது. 'இசைப் பூங்கா' எம். என். வேலுசாமி அவர்கள் இனிய குரலால் மக்கள் மனம் மகிழும் வண்ணம் இயக்கப் பாடல்கள் பாடினார். மற்றும் பல தோழர்கள் இயக்கப் பாடல்களைப் பாடினார்கள்.

திருவல்லிக்கேணி திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளர் மு. வரதராசன் கூட்டத்திற்கு தலைமை தாங்கினார்,

தோழர் கி. கண்ணன் வரவேற்றுப் பேசினார். பின் செயலாளர் ஆண்டறிக்கை வாசித்தார்.

திருவல்லிக்கேணிப் பகுதி தி. மு. க. செயலாளர் தோழர் நீலநாராயணன் கூட்டம் நடைபெறுவதற்கு ஏற்பட்ட இடையூறுகளைப் பற்றியும் மன்றம் ஆற்றி வரும் சீரிய பணியினையும் விளக்கிப் பேசினார்.

பிறகு மேயர் துணை மேயருக்கு வாழ்த்துரை வாசித்தளிக்கப்பட்டது. துணைமேயர் பாராட்டுக்கு நன்றி கூறி சிறிது நேரம் சொற்பொழி வாற்றினார்.

அருப்புக் கோட்டை புலவர் திரு. எம். எஸ். இராமசாமி காமராசர் திராவிட நாட்டுப் பிரிவினைக்கு மறுப்புக் கூறி பேசி வருவதை மறுத்து தக்க பதிலளித்து பேசி

(7ம் பக்கம் பார்க்க)

மாலைமணி
ஆசிரியர்: பி. எஸ். இளங்கோ

மணி 2 — 5-6-60 — ஒலி 31

பொதுக்குழு

ஆந்திரத்தில் இயங்கி வரும் காங்கிரஸ் மந்திரி சபையில் பெரும் பிளவு ஏற்பட்டு, காங்கிரஸ் அமைச்சர் சுப்பாரெட்டியை கேவலப் படுத்திய நிகழ்ச்சி உலகமறிந்த நிகழ்ச்சியாகும்!

காங்கிரஸ் கட்சிக்குள் தினம் ஒரு சண்டை, தினம் ஒரு பிளவு!

காங்கிரஸ் சர்க்காரில் தினம் ஒரு ஊழல், தினம் ஒரு அக்கிரமம், அநியாயம்!

பணச்சண்டை. பதவிச்சண்டை—பொறாமை, பொச்செரிப்பு—ஜாதிச் சண்டை, மதச்சண்டை!

நேரு கோஷ்டி, பந்து 'கோஷ்டி! காமராஜர் கட்சி, சுப்பிரமணியம் கட்சி!

இப்படி, ஊர்சிரிக்க, உலகம் சிரிக்க. நாடு சிரிக்க நகரம் சிரிக்க முச்சந்தியில் சிண்டை பிடித்துக்கொண்டு நிற்கும் காங்கிரஸ்காரர்கள் தான் நம்மைப் பற்றி கதை அளக்கிறார்கள்! நம்மிடையே பிளவு ஏற்பட்டு விட்டதாக நினைத்து மனப்பால் குடிக்கிறார்கள்! அடுத்த தேர்தலில் தனிக்காட்டு ராஜதர்பார் நடத்தலாம் என்று கனவு காண்கிறார்கள்!

காங்கிரஸ் கட்சியின் சரித்திரத்தைப் புரட்டுங்கள்! எந்தப் பக்கங்களைப் புரட்டினாலும் சாக்கடை நாற்றம் தான் அடிக்கும்!

முன்பு அமைச்சராக இருந்த ஆந்திரகேசரி பிரகாசத்திற்கும், ஓமந்தூர் ராமசாமிக்கும் பிடிக்கவே பிடிக்காது!

அதற்குப் பின்பு அமைச்சராக வந்த ஓமந்தூருக்கும். டாக்டர் சுப்பராயனுக்கும் அறவே பிடிக்காது!

அதற்குப் பின்பு ஆச்சாரியாரும், காமராஜரும் நடத்திய பாரதயுத்தம் உலகமறிந்த ரகசியம்தான்!

அதற்குப்பின் காமராஜரும், சுப்பிரமணியமும்—பாம்பும். கீரியும் போல் வாழ்ந்து வந்த கதையும் தெரிந்ததே.

சாமிநாதன், கோசல்ராம், மாரிசாமி, கிருஷ்ணமூர்த்தி போன்றவர்கள் நடத்திய தரை விளையாட்டுகளையும் யாரும் மறந்திருக்க முடியாது!

இது சின்ன இடம்—பெரிய இடத்திற்கே போவோம்!

உலகம் போற்றும் உத்தமர் காந்தியார், சுபாஸ் சந்திர போஸை எதிர்த்து பட்டாபி சீதாராமையாவை ஆதரித்ததும் பட்டாபி சீதாரமையா தோற்றவுடன் — "சீதாராமையாவின் தோல்வி என் தோல்வி" என்று காந்தியார் கூறியதும் நினைவிருக்கும் என்றே எண்ணுகிறோம்!

ஒரு பதினைந்து வருடங்களுக்கு முன்பு ஆச்சாரியாருக்கு பரிவுகாட்டி, காமராஜர்மீது காந்தியார் வசை புராணம் பாடியதையும் மறந்திருக்க மாட்டார்கள்!

காங்கிரஸ் மகாசபையின் வரலாற்றை படிப்போமானால் எத்தனையோ கதைகளுக்கு, எத்தனையோ வில்லன்களை எளிதாக உருவாக்க முடியும்!

இந்த உத்தமபுத்திரர்கள்தான் நம்மைப்பற்றி பேசுகிறார்கள், எழுதுகிறார்கள்! "சம்பத் சவால், கருணாநிதி சாட்டை" என்று கூறி காசு பறிக்கிறார்கள்!

நம்மைப்பற்றி காங்கிரஸ்காரர்கள் எது வேண்டுமானாலும் எழுதட்டும், பேசட்டும்! கவலையில்லை! நாம் அழிந்துவிட மாட்டோம்! நாம் மட்டும் மிக மிக கண்ணியத்தோடும், கட்டுப்பாட்டோடும் இருக்க வேண்டும்!

நம்மைச் சுற்றி நாலாபக்கங்களிலும், எட்டுதிசைகளிலும் எதிரிகள் அம்புகளை எய்த வண்ணம் இருக்கின்றார்கள் என்பதை மட்டும் நாம் மறந்து விடக்கூடாது! அதற்கேற்ப பணிபுரிய வேண்டும்! செயலாற்ற வேண்டும்! இதைப்பற்றி பொறுப்பில் உள்ளவர்கள் உணர்ந்தால் எதிரியைப்பற்றி நாம் கவலைப்படத் தேவையே இல்லை!

நம்மிடத்திலுள்ள கட்டுப்பாட்டில் இலட்சத்தில் ஒரு பங்குகூட காங்கிரஸ் கட்சியில் இல்லை! என்றாலும் நம்மை அவர்கள் கேவலமாகவே நினைக்கிறார்கள் காரணம் என்ன? நம்முடைய கட்டுப் பாட்டில் ஏதாவது வெடிப்புக் கண்டு விட்டதா? இல்லை. நிச்சயமாக இல்லை! என்றாலும் ஏதோ ஒரு இனம் தெரியாத ஐயம், ஏதோ ஒரு மனக்கிலேசம், ஏதோ ஒரு கவலை இருக்கத்தான் செய்கின்றன! ஏன் இந்த நிலை? எதனால் ஏற்பட்டது?

நாம் மிக மிக வளர்ந்து விட்டோம்! உலகமே அதிசயம் சொல்லும் வகையில் வளர்ந்து விட்டோம்! இந்த வளர்ச்சியைப் பக்குவப்படுத்தாவிட்டால் பதப்படுத்தாவிட்டால் எதும் பயனைக்காண முடியாது!

சமீபத்தில் நடைபெற்றிருக்கின்ற சில நிகழ்ச்சிகளை எண்ணிப் பார்க்கின்ற போது நமக்குப் பெருத்த வேதனையையும் துயரத்தையுமே அளிக்கின்றன! கல்லடிப் பட்டது, சொல்லடிப்பட்டது, சிறையிலே சித்திரவதைப் பட்டது—தாயைப்பிரிந்து, தந்தையை மறந்து ஆறு மாதம், ஒரு வருடம் கடுங்காவலை அனுபவித்தது இதற்குதானா என்று கூட எண்ணத்தோன்றுகிறது!

நமது பெருந்தலைவர்களில் ஒருவரும், பாராளுமன்ற உறுப்பினருமான திரு. சம்பத் அவர்கள்—பொறுப்புள்ளவர்கள் என்பதால், பொறுப்போடு காரியமாற்றுவார்கள் என்பதால் பொதுக்குழு உறுப்பினர்களுக்கு ஒரு கடிதம் வரைந்து சில யோசனைகளை கூறி இருந்தார் அந்த கடிதம் கிடைத்த மறுதினமே மாற்றார் நடத்தும் ஒரு ஏட்டில் வெளியிடப்பட்டு விட்டது! எப்படி அந்தப் பத்திரிகை வெளியிட முடிந்தது?

இதே போல் நமது பொதுச்செயலாளர், பொதுக்குழு உறுப்பினர்களுக்கு விடுத்த ஒரு சுற்றறிக்கையும் ஒரு ஏட்டில் வெளியாகி இருக்கிறது? எப்படி அந்த ஏட்டிற்கு கிடைத்தது? இவர்களுக்கு பெயர் பொதுக்குழு உறுப்பினர்களா? பொறுப்புள்ளவர்களா? இவர்களை துப்பி எறியத்தான் செய்ய முடியும்!

ஒரு பத்து வருடத்திற்கு முன்பு கட்சியில் சேர்ந்து—"கொள்கை, கொள்கை' என்று முழங்கி "இதோ ரத்தம், இதோ ரத்தம்" என்று பச்சை ரத்தத்தை கொட்டித் தனது வாழ்க்கையை கட்சிக்காக அர்ப்பணித்து விட்ட எவனுமே, எந்த கொள்கை வீரனுமே இந்தக் கொலை பாதகச் செயலை செய்திருக்க மாட்டான்!

எவனோ ஒரு ஒற்றன், எவனோ ஒரு உளவாளி, எவனோ ஒரு பதவி வெறி பிடித்தவன், எவனோ ஒரு கொள்கையற்ற சுயநலவாதி தான் இந்த கொலை பாதகச் செயலை செய்திருக்க முடியும்! யார் அந்த கோழை! ஏன்? அவனுக்கு என்ன இங்கு வேலை?

எடுவானை என்றால், களத்தில் வீழ்ந்த தலைகள் ஏராளம், ஏராளம்! அந்தக் கட்சியிலா இப்படிப்பட்டவன் இருக்க வேண்டும்! வேண்டாம், வேண்டவே வேண்டாம்! அப்படிப்பட்டவர்கள் மீது உடனடியாக கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்! நேற்று வந்தவர்களுக்கெல்லாம் பெரும் பொறுப்புகளும் நிலைமாற வேண்டும்?

ஒரு கட்சி என்றால் எத்தனையோ கருத்து வேற்றுமைகள் இருக்கக் கூடும், இருக்கத்தான் வேண்டும்—இருந்தால் தான் கட்சியும் வளரும்! ஆனால் அது எதிரிகளுக்கு தெரிவானேன், தெரிவிப்பானேன?

பொதுக்குழு உறுப்பினர்களிடம் எதையுமே சொல்லக் கூடாதா? எதையுமே எழுதக் கூடாதா? அப்படிப் பட்ட பயங்கர வாதிகளா?

தயவு செய்து அண்மையில் நடைபெற இருக்கின்ற பொதுக்குழு இதை கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை நமது தாழ்மையான வேண்டுகோளாகும்!

ஒரு யந்திரம் பழுது இல்லாமல் இயங்க வேண்டுமானால் அந்த இயந்திரத்தில் இருக்கக்கூடிய ஒவ்வொரு சிறு திருவாணியும் சரியாக இருக்க வேண்டும்! அதே போல் தான் கட்சியும் இயங்க வேண்டும்!

(10-பக்கம் பார்க்க)

தாளமுத்து, நடராஜனுடைய தியாகம்தான் கடைசி தியாகமா? அந்த வீரர்களுடைய போராட்டம்தான் இறுதி போராட்டமா?

நாம் போராட்டம் நடத்த வில்லையானுல் இந்த நாட்டிற்கு விமோசனம் ஏது? வாழ்வுதான் ஏது ?

சம்பத் கொட்டும் போர் முரசம்!

நெல்லிக்குப்பம் வைடிப்பாக்கம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சென்ற வாரம் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் டில்லி பாராளுமன்ற உறுப்பினரும், கழகத் தலைவர்களில் ஒருவருமான சொல்லின்செல்வர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் பேசியதாவது:—

அன்புள்ள தலைவர் அவர்களே! பெரியோர்களே, தோழர்களே.

இன்று இங்கு நடைபெறும் இந்தக் கூட்டத்தில் கலந்து பேசும் வாய்ப்பு கிடைத்தமைக்குப் பெரிதும் அகமகிழ்கிறேன்.

இந்த வட்டத்தில் நமதுகழகம் மிக நல்ல முறையில் வளர்ந்து மக்களின் அன்பைப் பெற்றிருப்பது கண்டு பெரிதும் மகிழ்ச்சி கொள்கிறேன்.

இந்தக் கூட்டத்தில் கூடியிருக்கும் பெருவாரியான மக்களைப் பார்க்கும் போதே அவர்கள் நமது கொள்கைகளைப் பற்றியும், நமதுகழகத்தை பற்றியும் அறிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவல் கொண்டுள்ளார்கள் என்பது நன்கு விளங்குகிறது. அதை நாம் பூர்த்தி செய்ய வேண்டியது நமது நீங்காக் கடமையாகும்.

இன்றுள்ள மக்களில் பெரும்பான்மையோர் நமது நாட்டிற்கு சுதந்திரம், சுயராஜ்யம் வந்திருக்கிறதென நம்பிக்கொண்டிருக்கிறார்கள்.

இந்நாட்டை வெள்ளையன் ஆட்சி புரிந்து வந்தான். அது நீங்கி நமது நாடு சுதந்திரம் பெற்று நமது ஆட்சி மலரவேண்டுமென முயற்சிகள் செய்யப்பட்டது. வெள்ளையனும் இந்தியாவைவிட்டுப்போய்விட வேண்டுமென எண்ணினான், அதே போன்று 1947-ம் ஆண்டு வெள்ளையன் இந்தியாவைவிட்டுவெளியேறினான். ஆனால் இன்று டில்லியிலுள்ள சில ஏகாதிபத்தியக்காரர்களின் கையில் இந்தியா சிக்கி மிகக் கொடுமையான ஆட்சி நடைபெற்று வருகிறது.

நமது திராவிட முன்னேற்றக் கழகம் டில்லியின் ஆட்சி பீடத்திலிருந்து விடுபட்டு சுதந்திர திராவிட நாடு அடையப் பாடுபட்டு வருகிறது.

மக்களை ஏமாற்றி சுதந்திரம் பெற்றுவிட்டோம் என்று பொய்யுரை கூறி வெள்ளையனிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்றியுள்ள அதிகார வெறியர்கள் ஆதிக்கக்காரர்கள் இன்று நாட்டிலுள்ள மக்களையும், நாட்டையும் பாழ்படுத்தி வருவதுடன், நாட்டில் வளர்ந்துவரும் சுதந்திர-விடுதலை உணர்ச்சியை அடக்கி, ஏகாதிபத்திய வெறியைப் பரப்பி வருகிறார்கள். இந்த நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலையை எடுத்துக் கொள்ளுங்கள். இங்கே சர்க்கரை உற்பத்தி செய்யப்படுகிறது. அந்த சர்க்கரையை பல ஊர்களுக்குக் கோட்டா முறையில் அனுப்பப்படுகிறது.



அதே போன்று ஈரோட்டிற்குக் கோட்டா போட்டு சர்க்கரையை ஒதுக்கி வைத்து பின் கள்ள மார்க்கட்டில் அதை விற்கப்படுகிறது இது நான் சொல்லி உங்களுக்குத் தெரிய வேண்டியதில்லை. உங்களனைவருக்கும் நன்கு தெரியும்.

இன்று நம்மை ஆட்சி செய்வது டில்லி. டில்லியில் உள்ளவர்களின் அதிகாரத்திற்குட்பட்டு தான் நாம் இருக்கிறோம். நமக்கென்று மந்திரிகள் இருக்கிறார்கள். ஆனால் நமது மந்திரிகள் டில்லியிலுள்ள மந்திரிகளுக்கு அடிமைகள். அதிகாரமற்றவர்கள்.

நமக்கு முதல் மந்திரியாக காமராசர் இருந்து வருகிறார்.

டில்லியில் முதன் மந்திரியாக நேரு இருந்து வருகிறார்.

நமது மந்திரி காமராசர், டில்லியிலுள்ள நேரு முதல் மற்ற மந்திரிகளுக்கு அடிமை, அதிகாரமற்றவர். இங்கிருந்து காவடி தூக்கித் திரிபவர்.

நமது நாட்டில் விலைவாசிகள் விஷம் போல் ஏறி மக்கள் படமுடியாதத் துயரத்தில் ஆழ்ந்திருக்கிறார்கள். இதை நமது மந்திரிகள் உணர்ந்த பாடில்லை. இந்த நிலையை மந்திரிகளிடம் எடுத்துக் கூறுவதற்கும், மக்களின் துயர் நீங்க வழி செய்வதற்காகவும் மக்களின் சார்பாக ஒரு தூதுக் குழு ஒன்று நமது அமைச்சரை சந்தித்து, நமது மாநிலத்தின் விலைவாசி உயர்வின் கொடுமையை எடுத்துக் கூறி இதைக் களைந்து மக்கள் நல்வாழ்வு வாழ வகை செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டதுடன் மக்களின் சார்பாக ஒருவிண்ணப்பமும் கொடுத்தார்கள்.

இதற்கு நமது மாநில அமைச்சர் என்ன கூறினார் தெரியுமா? "விலைவாசிகள் உயர்ந்திருப்பது எனக்கும் தெரியும். நான் ஒன்றும் செய்வதற்கில்லை இதுபற்றி மத்திய சர்க்கார் தான் ஏதாவது செய்ய வேண்டுமென்று கூறி தூதுக் குழுவினர் கொடுத்த விண்ணப்பத்தில் மந்திரியும் கையெழுத்திட்டார். அதை டில்லியிலுள்ள தனது எஜமானர்களுக்கு அனுப்பி ஆவன செய்வதாகக் கூறி குழுவினரை அனுப்பினார். இங்குள்ள மந்திரிகளுக்கு விண்ணப்பங்களை வாங்கி டில்லிக்கனுப்பி அங்குள்ளோரின் உத்திரவுகளை வாங்கி அவர்கள் சொல்படி நடப்பது தான் வேலை. அதைத் தவிர வேறு ஒன்றும் அவர்களால் செய்ய முடியாது.

பண்டித நேரு டில்லியிலிருந்து சென்னைக்கு நாளை வருகிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவரை எப்படி வரவேற்பது எச்சந்த மந்திரி எப்படி எப்படி நிற்பது, என்னென்ன பேசுவது என்பதை முதல் நாளே ஒத்திகைபார்த்துத் தான் மந்திரியை வரவேற்கச் செல்வார்கள். இந்த மாநில அமைச்சர்களுக்குக் கொஞ்சம் கூட சுதந்திரம் கிடையாது. டில்லி ஆட்டி வைப்பது போன்று ஆடுபவர்கள் தான் மந்திரிகளாக இருக்கிறார்கள்!

நமது மாநில அமைச்சர்கள் டில்லிக்கு வந்தால் அவர்களை வரவேற்று மரியாதை கொடுப்பதற்குக் கூட அங்கு ஆட்களில்லை அவர்கள் அங்கு அனாதைகள் போல் வருகிறார்கள். அனாதைகள் போல் செல்லுகிறார்கள். அது மட்டுமா? டில்லி மந்திரிகள் இவர்களை மதிப்பதில்லை. இவர்களைப் பார்ப்பதும் கிடையாது. இவர்கள் டில்லிக்கு வந்தால் சில அதிகாரிகளைப் பார்த்து விட்டு வந்து விடுவார்கள் இவர்களை நாம் நமது மந்திரிகள் என்று கூறுவதற்குக் கூட வெட்கமாக இருக்கிறது. நமது மந்திரிகள் எப்படி இருக்கிறார்கள் என்றால், கிராமத்திலுள்ள காடுகளில்—அதுவும் சோளக் காடுகளில் வைத்திருக்கும் பொம்மைகள் போல்தான் இருந்து வருகிறார்கள்.

இந்த மாநிலத்திலுள்ள அமைச்சர்கள் இன்று மைதானங்களில் வந்து மக்கள் முன் பேசுகிறார்கள். இதற்கு முன்பிருந்தவர்கள் மக்களைச் சந்திக்க மாட்டார்கள். மைதானங்களுக்கு வரமாட்டார்கள். இன்று இவர்கள் வருகிறார்கள் என்றால் அதற்குக் காரணம் நமது அண்ணா அவர்கள் தான்.

சட்டமன்றத்தில் பதினைந்து உறுப்பினர்களுடன் நமது அண்ணா அவர்கள் சென்று அங்குள்ளதை மக்களிடம் கூறி வருகிறார். இதைக் கண்ட அமைச்சர்கள் தாமும் மைதானங்களுக்கு வந்து மக்களைச் சந்திக்க வேண்டுமென்று நினைத்து வருகிறார்கள். அப்படி வரவில்லையானால் அவர்கள் அமர்ந்திருக்கும் நாற்காலி பறந்துவிடுமென்று அஞ்சியே வருகிறார்கள்.

டில்லியிலுள்ள அமைச்சர்கள் தமிழ் நாட்டின் மீதும், தமிழ் மக்கள் மீதும் அக்கரையற்று இருக்கிறார்கள். தமிழ் நாட்டு மக்கள் வாழ்க்கையில் கவலையே இல்லாதிருக்கிறார்கள். நமது

(4-ம் பக்கம்பார்க்க)

அறிஞர் அண்ணா சட்ட சபைக்குள் நுழைந்த பின்புதான் மந்திரிகள் மைதானத்திற்கு வந்தார்கள்!

(சம்பத் பேச்சு)

(3ம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டுப் பிரச்சினையைப் பற்றிக் கூறினால் புறக்கணிக்கிறார்கள். டில்லியிலுள்ளவர்கள் தங்களது மொழியையும், நாகரீகத்தையும் திணித்து தங்கள் ஆதிக்கத்தைச் செலுத்த முயற்சி செய்து அதற்கான வேலைகளைச் செய்து வருகிறார்கள்.

ஒரு மாநிலத்தில் பேசும் மொழியை விட்டு, அவர்கள் உயிரென மதித்து வரும் மொழியை விட்டு இன்னொரு மொழியைப் பின்பற்ற வேண்டுமென்று வற்புறுத்தி சட்டமியற்றுவது எதைக் காட்டுகிறது. நமது மாநிலத்தை அடிமைப்படுத்தி விட வேண்டுமென்ற ஏகாதிபத்திய வெறியைத் தான் காட்டுகிறது இன்று அரசியல் டில்லியிலுள்ள சிலர் கையில் சிக்கி இருக்கிறது. அவர்கள் சொல்லுகின்ற படி நடப்பது தான் அரசியலாகி விட்டது. மற்றவர்களையோ, மாநிலங்களையோ கலந்து எதையும் செய்ய வேண்டுமென்ற பரந்த நோக்கமோ அவர்களிடம் கிடையாது. வடநாட்டுக்காரர்கள் கூறுவதை. மற்றவர்கள் கேட்டு அடிமையாக இருக்க வேண்டுமென்றே டில்லியிலுள்ளோர்கள் நினைக்கிறார்கள்.

இதைத் தான் திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கிறது, நமது நாட்டையும், நமது மக்களையும் கவனியாது அவர்கள் நல்வாழ்விற்கு வகை செய்யாது இருந்து கொண்டு அடிமைப்படுத்த நினைப்பவர் எப்படிப்பட்ட அறிவாளியாக இருந்தாலும். மேதாவியாக இருந்தாலும் சரி நமது கழகம் அவர்களை மதிக்காது அவர்களை மேதாவிகள் என்று நினைக்காது.

இன்று திராவிட முன்னேற்றக் கழகம் மக்களிடம் அதிக செல்வாக்கு பெற்று ஓங்கி வளர்ந்து வருகிறது. அதற்குக் காரணம் அதன் கொள்கை மிகவும் நல்ல கொள்கை. மக்கள் ஏற்று வரவேற்கும் தன்மையில் இருந்து வருகிறது.

திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கைகள் மக்களின் குறைகளைப் போக்கும்படியான நிலையிலிருக்கிறது. அதனால் தான் தங்கள் வாழ்க்கை உயரும் என்று மக்கள் நினைக்கிறார்கள்!

அதனால் தான் இன்று கழகக் கூட்டங்களுக்கு ஏராளமான மக்கள் வந்து கூடுகிறார்கள். ஏன் மாற்றாரே பாராட்டி புகழ்கிறார்கள்!

நாம் மக்கள் சபையிலும், டில்லி அமைச்சர்களிடத்திலும் சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை வைக்க வேண்டும். தென்னகத்தில் பல திட்டங்களை வகுத்து தொழிற் நிலையங்கள் ஏற்படுத்த வேண்டுமென்று கூறி வருகிறோம்!

மக்கள் சபையில் நான் பல முறை வற்புறுத்திப் பேசி வருகிறேன். அதை அமைச்சர்கள் கவனிப்பதில்லை, நான் பேசிக் கொண்டிருக்கும் போதே மணியடித்து நிறுத்திவிடுகிறார்கள்.

நாம் டில்லியில் மக்கள் சபையில் நமது கொள்கைகளை விளக்கிப்பேசும் போது மாற்றுக் கட்சிக்காரர்கள் மிக உன்னிப்புடன் கேட்கிறார்கள். அவர்கள், சபாநாயகர் மணியடித்ததும் நாம் நிறுத்திவிட்டதைப்பார்த்து.ஏன் நிறுத்தினீர்கள் இன்னும் சிறிது நேரம் பேசலாமே என்று கேட்கிறார்கள். திராவிட முன்னேற்றக்கழகம் இன்று நாட்டிலுள்ள மக்களுக்கெல்லாம் திருவிளக்காக இருந்து அறிவு வெளிச்சத்தைத் தந்து வருகிறது.

தென்னகத்தின் வளர்ச்சிக்காக டில்லி அரசினர் எந்தவித புதுத் திட்டங்களும் வகுக்கவில்லை. அதை வற்புத்தி பல முறை மக்கள் சபையில் பேசி இருக்கிறேன். மக்கள் சபையில் சரியான முறையில் எதிர்கட்சிகளுக்கு விவாதிப்பதற்கு இடமளிப்பதில்லை,

பலர் தங்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்பு கிடைக்கவில்லை என்று வருத்தமடைந்திருக்கிறார்கள். இன்று மக்கள் சபையில் ஒரு சிலருக்குத்தான் பேசும் வாய்ப்புக் கிடைத்து வருகிறது. அங்கு தென்னகத்திலிருந்து சென்றிருப்பவர்களை மதிப்பது கிடையாது.

இன்று நமது கழகம் தென்னகத்தில் வளர்ந்து வரும் நிலையைக் கண்டு நமது மாநில அமைச்சர்கள் மிகவும் அஞ்சி, நம்மை வீழ்த்துவதற்காகவாவது இங்கு ஏதாவது செய்யவேண்டுமென்று நினைத்து டில்லி அரசாங்கத்திடம் இங்கு பல தொழிற் நிலையங்களை ஏற்படுத்த வேண்டுமென்று கெஞ்சுகின்றனர்,

மேட்டூரில் அலுமினியத் தொழிற்சாலை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டு இருக்கிறார்கள். அப்படிக் கேட்கும்போது நமது கழகத்தைக் காட்டுகிறார்கள் "பிரிவினை சக்தி வளர்ந்து வருகிறது என்றும் அதை அடக்கி அவர்களைத் தோற்கடிக்க வேண்டுமானால் தென்னகத்தில் ஏதாவது செய்ய வேண்டு"மென்றும் இங்குள்ள நமது அமைச்சர்கள் டில்லிக்குப் போய் கேட்டு வருகிறார்கள்.

நாம் டில்லி ஏகாதிபத்தியத்தை எதிர்த்து வருகிறோம். தென்னகம் டில்லியின் பிடியிலிருந்து விடுபடவேண்டுமென்று வற்புறுத்தி வருகிறோம். டில்லிக்கும், நமக்கும் தொடர்பில்லை என்று போராடி வருகிறோம், அப்படி நாம் எதிர்க்கிறோம் என்றால் அவர்கள் பலத்தை அறியாமலோ, அவர்களது அதிகாரத்தை உணராமலோ எதிர்க்கவில்லை. அவர்களிடமிருக்கும், ராணுவத்தையும் ஆயுதங்களையும் உணர்ந்தே எதிர்க்கிறோம்,

நம்மிடம் எந்தவித பலமுமில்லை. நாம் வெறுங்கையுடனிருந்து கொண்டே பலம் வாய்ந்த டில்லி சர்க்காரை எதிர்க்கிறோம். எதை வைத்து எதிர்க்கிறோம். மக்களின் உணர்ச்சியையும், மக்களின் எழுச்சியையும் கொண்டே நாம் எதிர்த்து வருகிறோம்.

மக்கள் சக்திக்கு எதிராக வேறு எந்த சக்தியும் ஒன்றும் செய்ய முடியாது என்பதை உணர்ந்தே நாம் டில்லியை எதிர்க்கிறோம்.

பண்டித நேரு அகில உலகத்திலும் மிகவும் செல்வாக்கு வாய்ந்தவர் என்றும், அகில உலகத் தலைவர்களும் அரசியல் விவகாரங்களைப் பற்றி பண்டித நேருவிடம் தான் ஆலோசனை கேட்க வருகிறார்கள் என்றெல்லாம் புகழப்படுகிறார்கள். அவர் நாட்டில் சமாதானம் நிலவ அரும்பாடுபட்டு வருகிறார் என்றெல்லாம் புகழ்கிறார்கள். அப்படிப்பட்ட நேரு. பாராளுமன்றத்தில் தான் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற முடியவில்லை.

சில திங்களுக்கு முன் பண்டித நேரு ஒரு வாக்குறுதியளித்தார். அதாவது இந்தி பேசாத மாநிலங்களில் வாழும் மக்களின் சம்மதமின்றி இந்தியைப் புகுத்த மாட்டோம் என்றார். ஆனால் அதற்கு மாறாக, இந்தியக் குடியரசு தலைவர் ராஜேந்திரப்பிரசாத் "இந்தி ஆட்சி மொழி என்ற அறிக்கையில் கையெழுத்திடப் போகிறார் என்று இந்திய உள்நாட்டமைச்சர் கோவிந்த வல்லப பந்த் பாராளுமன்றத்தில் அறிவித்தார் உடனே நான் உள்நாட்டமைச்சர் பந்தைப் பார்த்துக் கேட்டேன் 'பிரதமர் நேரு பாராளுமன்றத்தில் கொடுத்த வாக்குறுதி என்ன வாயிற்று'' என்று கேட்டேன்.

உடனே இந்தி வெறியர்கள் என்னைப்பேச விடாது காலித்தனம் செய்து கத்தினார்கள். அவர்கள் மொழி வெறியும், வடநாட்டு ஏகாதிபத்தியமும் பண்பையும், நாகரிகத்தையும். மறந்து விட்டது. அவர்கள் பண்பிழந்து கத்தியதை நேருவும், பந்தும் மௌனமாக இருந்து பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

உலகம் முழுவதும் சுற்றி உலக மக்களுக்கெல்லாம் நல்லுபதேசம் செய்துவரும் நேரு ஏன் சும்மா இருந்தார். இந்தி வெறியர்களைக் கண்டித்திருக்க வேண்டாமா? அவர் அப்படிக் கண்டித்திருந்தால் அவரைப் பாராட்டுவேன். ஆகவே நாம் இந்தியை எதிர்த்துப் போராட வேண்டும். அதற்கு நாம் தயாராக இருக்க வேண்டும்.

வடநாட்டிலுள்ளவர்கள் எல்லாம் நம்மை மிகவும் கேவலமாக எண்ணுகிறார்கள். நாம் உத்தியோகத்திற்காகப் பாடுபடுகிறவர்கள் என்று நினைக்கிறார்கள், தமிழ்நாட்டிலும், கேரளத்திலும் உள்ள மக்கள் நன்றாக படித்தவர்கள், அறிவாளிகள் என்று நினைக்கிறார்கள். ஆனால் அவர்கள் அறிவையும் திறமையையும் வடவருக்கு வாடகைக்கு விடுகிறவர்கள் என்றும் கருதுகிறார்கள். இந்த எண்ணத்தை நாம் மாற்ற வேண்டும்.

நாம் வெறும் பேச்சுபேசுகின்றவர்கள் என்று அவர்கள் நினைப்பதை மாற்றவேண்டும், அதற்காக நாம் செயலில் பணியாற்றுபவர்கள் என்பதை உணர செய்யவேண்டும்.

நமது நாட்டில் படித்தவர்கள் அதிகம்பேர் இருக்கிறார்கள் என்று ஜம்பம் பேசிக் கொள்கிறோம், படித்தவர்கள் அதிகம் இருந்து என்ன பயன்? படித்தவர்களுக்கு இருக்கிற வீரம் இங்கே இருக்கிறதா?

நம்நாடு விடுதலை அடைவதற்கான நற்பணியில் யாவரும் சேர வேண்டும்.

வடநாட்டு பாராளு மன்ற உறுப்பினர் ஒருவர் என்னைக் கேட்டார், ஏன நாட்டு பிரிவினையென்று கிளர்ச்சி செய்து கொண்டு வடக்கு—தெற்கு என்று பேசிவருகிறீர்கள். உங்களுக்கு உத்தியோகம்தானே தேவை அதைக் கேட்டுப் பெற்றுக் கொள்ளுங்கள், என்று. இதிலிருந்து அவர்கள் நம்மைப் பற்றி எவ்வளவு கேவலமாகவும், இழிவாகவும் நினைத்திருக்கிறார்கள் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள், நமக்கு நமது உரிமை அவசியமா? உத்தியோகம் அவசியமா. உரிமையை இழந்து வாழ்வதைவிட வாழாமலிருப்பது நல்லது.

ஆகவே நாம் நமது நாட்டு விடுதலைக்காகப் போராடி நாம் கோழைகளல்ல, விடுதலைக்காகப் போராடும் வீரர்கள் என்பதைக் காட்டவேண்டும்.

நாம் கோழைகள், நமக்கு வீரம் இல்லை என்றும், அவர்கள் என்ன பேசினாலும் நாம்கேட்டுக் கொண்டிருப்போம் என்று வடநாட்டாரும், பண்டித நேருவும் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள்.

பண்டிதநேரு சென்னை வரும் போதெல்லாம், இங்கு கூட்டங்களில் பேசும் போதெல்லாம் நம்மைக் கேட்கிறார். இந்தியில் பேசுவதா? ஆங்கிலத்தில் பேசுவதா என்றுகேட்கிறார். இப்படிப் பேசவிடலாமா? அப்படிப் பேசுவதிலிருந்து அவர் நம்மைப்பற்றி என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார்.

அவர் அப்படிக் கேட்பதே நம்மைக் கேவலப் படுத்துவதாகாதா?

நாம் சென்று அவர்கள் நாட்டில் போய் அப்படி கேட்டால் சும்மா இருப்பார்களா? பண்டித நேராக இருந்தாலும் சரி, வேறு யாராக இருந்தாலும் சரி அப்படிக் கேட்டவர்களைச் சும்மா விடக் கூடாது. அவர்களுக்கு நல்ல பதிலளிக்க வேண்டும், அப்படி பதிலளித்தால் தான் இனி நம் நாட்டிற்கு வந்து அவ்விதம் கேட்க மாட்டார்கள்.

இது எப்படி இருக்கிறதென்றால் ஒரு பெண்ணைப் பார்த்து ஒருவன் ஏதாவது தகாத வார்த்தைகள் கேட்கிறான் என்று

(5ம் பக்கம் பார்க்க)

குருஷேவிற்கு இருக்கும் நாட்டுப்பற்று நமக்கிருக்க வேண்டும்!

அதனால் தான் அவரைக் கண்டு உலக நாடுகளெல்லாம் அஞ்சுகிறது!

(சம்பத் பேச்சு)

(4ம் பக்கத் தொடர்ச்சி)

வைத்துக்கொள்ளுங்கள். அவனை முதலில் கேட்கும் போதே அயனுககுப் புத்தி வரும்படி பதிலளித்துவிட்டால் மறுபடியும் அந்தப் பெண்ணைப் பார்தது கேள்விகள் கேட்டிருக்க மாட்டான். அது போலவே நேரு முதலில் கேட்கும் போதே நாம் எதிர்த்திருந்தால் மீண்டும், மீண்டும் கேட்க மாட்டார்,

பாராளுமன்றத்தில் நாம் இந்தியைப் பற்றிப் பேசும் போது நம்மைப் பேச விடாது தடுக்கிறார்கள் என்றால் அவர்களுக்கு மொழியின் மீது எவ்வளவு அவர்களுக்கு வெறியும், பற்றும் இருக்கிற தென்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

சமீபத்தில் நடைபெற்ற உலகப் பெருந் தலைவர்கள் மாநாட்டிற்கு எல்லா நாட்டிலுமிருந்து எல்லா நாட்டுத் தலைவர்களும் வந்திருந்தார்கள், அதேபோன்று ரஷ்ய நாட்டுத் தலைவர் குருசேவும் வந்திருந்தார்.

அங்கு தனது நாட்டிறகு இழிவு வரும்படியான நிலை தன் நாட்டை அவமதிக்கும்படியான செய்கைகள் நடைபெற்றது என்றதும் அந்த செய்கையைக் கண்டித்து விட்டு அந்த மாநாட்டிலிருந்து குருசேவ் வெளியேறினர். அவர் தன் நாட்டின் மீது கொண்டுள்ள பாசம். பற்று அவருக்கு ஏற்பட்ட உணர்ச்சி நமக்கேன் ஏற்படக் கூடாது

குருசேவிற்கு அந்த நாட்டு பற்று இருப்பதால் தான் அவரைக் கண்டு எல்லா நாட்டினரும் பயப்படுகிறார்கள். இன்று உலகமே அவரை எதிர்ப்பார்க்கிறது,

ஆகவே நமக்கு நம்முடைய நாட்டை விடுதலை அடையச் செய்ய வேண்டுமென்ற உணர்ச்சி ஏற்பட வேண்டும்.

இன்று இந்தி பொது மொழி என்று அறிக்கை வந்து விட்டது அதை எதிர்க்க நாம் என்ன செய்ய வேண்டும் நாம் சும்மா இருந்து விடுவதா? அப்படி சும்மா இருந்தால் நம்முடைய பின் சந்ததிகள் இகழ மாட்டார்களா நமுடைய திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்று தான் இந்தியை எதிர்க்கும் சக்தியைப் பெற்றிருக்கிறது ஆகவே நாம் இந்தியை எதிர்க்க போர்க் கொடியை உயர்த்த வேண்டும்!

போரிடுவதற்கு நாம் இப்பொழுதே தயாராக வேண்டும். தாளமுத்து நடராசனின் தியாகத்தைப் பற்றிப் பேசி பெருமைப்பட்டுக் கொண்டிருப்பதில் பயனில்லை, அவர்கள் தங்களது கடமைகளைச் செய்து விட்டுச் சென்றார்கள்,

தாளமுத்து நடராசன் செய்த தியாகத்தால் நம்முடைய பணி தீர்ந்து விடவில்லை, அதுவே நமது இறுதிப் போருமாகாது. அவர்கள் நமக்கு முன் மாதிரியாக இருந்து விட்டுச் சென்றிருக்கிறார்கள்.

அவர்களைப் பின்பற்றி நாம் நமது வீரததைக் காட்ட வேண்டும் நம்முடைய மொழியை—நாகரீகத்தை அழிக்க வரும் நம்மை அடிமை கொள்ள வரும் ஒரு வேற்று மொழியை எதிர்த்தே ஆகவேண்டும்

நாம் ஆண்மையற்றவர்களல்ல—வீரம் மிக்கவர்கள்—பேடிகள் கோழைகளல்ல என்பதைக் காட்டியே தீரவேண்டும்.

"இந்தி ஒழிக" என்று முழக்கம் செய்து விட்டால் இநதி ஒழிந்துவிடாது.

"ஒழிக" என்ற குரல் இன்னும் வடவர்களை, இந்தி ஆதிக்கக் காரர்களைப் பயப்படும்படி செய்யவில்லை. நாம் எதிர்க்கிறோம் என்று தெரிந்தும் அதைப் பறறிக் கவலைப்படாது இருக்கிறார்கள், இந்தியை பலாத்காரமாகத் திணித்து அவர்களது ஏகாதிபத்யத்தைநிலைநாட்ட முற்பட்டுவிட்டார்கள். ஆகவே நாம் சும்மா கை கட்டிக் கொண்டிருந்தால் இந்தி ஒழிந்து விடாது. அதை ஒழிக்கப் பலமான போராட்டம் நடத்தவேண்டும். அந்தப் போராட்டததில் நாம் பல தியாகங்களைச் செய்யவேண்டும்.

திராவிட முன்னேற்றக்கழகம் நடத்திய எந்தப்போராட்டமும் தோல்வியடையாது, தோல்வியடையும் போராட்டங்களைக் கழகம் நடத்தாது நம்முடையக் கழகத்தில் இருப்பவர்களெல்லாம் கொள்கை உரம் பெற்றவர்கள். கழகம் கட்டளையிட்டால் உடனே காரியத்தில் இறங்குபவர்கள். ஆகவே நாம் இந்தியை எதிர்க்கத் தயாராக இருக்கவேண்டும், அதற்காக இப்பொழுதிருந்தேஅதற்காவன செய்யவேண்டும்.

தேர்தலே நமக்கு முக்கியமான ஒரு குறிக்கோளல்ல, சட்டமன்றமும், பாராளுமன்றமேதான் நமது இலட்சியமாகாது. அங்கு கொள்கைகளை, நமது கருத்துக்களைக் கூறவே செல்கிறோம்.

நம்முடைய உரிமைக்கு போராட வேண்டுமென்ற சந்தர்ப்பம் ஏற்பட்டு விட்டால் நமக்குப் போராட்டம்தான் முக்கியம் சட்ட மன்றமும் பாராளு மன்றமும் முக்கியமல்ல,

நாம் முன்பு இந்தி கட்டாயமாக வந்தபோது எதிர்த்தோம். இரயில்வே நிலையங்களில் இந்தி எழுத்துக்கு முதலிடம்கொடுத்து நமதுதாய் மொழியைக் கடைசியாக எழுதியிருந்தார்கள் நாம் அதை எதிர்ததோம் தார் கொண்டு இந்தியைஅழித்தோம். அதனால் என்ன நிகழ்ந்தது. நமது தாய் மொழியாகிய தமிழ் முதலிடம் பெற்றது. ஆனால் மீண்டும் இந்தி வேறு உருவில் வந்து தனது ஆதிக்கத்தைச் செலுத்த முற்பட்டுவிட்டது,

தபால் தலைகளில் இந்தி எழுத்துக்கள் வந்துவிட்டது, தபால் அட்டைகளில் இந்தி வந்து விட்டது, தபால் கவர்களில் இந்தி வந்துவிட்டது தபால் நிலையங்களிலும், வானொலி நிலையங்களிலும் இந்தி எழுத்துக்களைப் புகுத்தி விட்டார்கள்.

இந்தியை எல்லாவிடங்களிலும் புகுத்துவதற்கு வழி செய்து வருகிறார்கள்.

சாலைகளில் இருக்கும் மைல் கற்களில் இந்தி எழுத்தை எழுத ஆரம்பித்து விட்டார்கள்

இதை எப்படி ஒழிப்பது, இதை நீக்க நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை நாம் சிந்திக்க வேண்டாமா?

இந்தியைப் புகுத்தி விட்டார்கள் என்றதும் பலர் மனவேதனை கொண்டு, நாம் இந்தியை எதிர்க்க மாட்டோம் என்ற அச்சமும் கொண்டுவிட்டார்கள் ஆகவே தயாராகுங்கள் இந்தியை விரட்ட—நம் தாய்மொழியைக் காக்க போர்க் கொடியை உயர்த்தி, அணிவகுத்து நில்லுங்கள்,

நாட்டின் விடுதலைக்காக நற்றொண்டு புரிய இன்றே தயார் என்று போர் முழக்கம் செய்து புறப்படுங்கள். நாட்டு விடுதலை தான் நமக்கு முக்கியம். தென்னாப்பிரிக்காவில் நடைபெற்ற விடுதலைப் போராட்டத்தைப் பற்றி நமது நாட்டுப் பத்திரிகைகள் எழுதும் போது கருப்பர்கள் போராட்டம் என்று எழுதி கேவலப்படுத்துகிறார்கள் இது மிகவும் தவறு அவர்கள் கருப்பர்களாக இருக்கலாம். அவர்களுக்கிருக்கும் விடுதலை உணர்ச்சி அவர்களுக்கிருக்கும் நாட்டுப் பற்று, அவர்களுக்கிருக்கும் தன்மான உணர்ச்சி நமக்கிருக்க வேண்டும்,

இன்று அவர்கள் போராடும் தன்மையை நாம் உணர்ந்து பார்க்க வேண்டும். அவர்கள் தங்களது இழிவைப் போக்க வெறி பிடித்த சர்க்காரோடு போராடி வருகிறார்கள்! அந்த உணர்ச்சி நமக்கிருக்க வேண்டும்!

இன்று நமது தென்னகத்தின் அரசியலில் ஒரு வேகமில்லை விறு, விறுப்பு இல்லை நாம் புதிய வேகத்தையும் விறு, விறுப்பையும் உண்டாக்க வேண்டும்!

அந்த விறு விறுப்பையும் வேகத்தையும் நமது திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றால் தான் செய்ய முடியும், ஆகவே நமது கழகம் இடும் கட்டளையை யேற்கத் தயாராக இருங்கள், கட்டுப்பாடுடனும், ஒற்றுமையுடனுமிருந்து போராட்டத்தை வெற்றி பெற உழையுங்கள்! நமககு என்றும் தோல்வி கிடையாது! வெற்றி தான்!

நீங்கள் எனக்கு இவ்வளவு சிறப்புடன் வரவேற்று உபசரித்து இந்தக் கூட்டத்தில கலந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்தமைக்கு நன்றி தெரிவித்து விடை பெறுகிறேன்!

வணக்கம்

(நமது விசேஷ நிருபர்)

"நான் சாகவில்லை"!

"நான் சாகவில்லை; கண்மங்கி, காது பஞ்சடைந்து மாளவில்லை! பாம்பு கடித்துவிஷமேறி மடியவில்லை. கடமையைக் காக்க என் இரத்தம் பயன்பட்டது. வீணுக்கு மடியவில்லை—வேலையைச் செய்து விட்டு மடிந்தேன். இப்படி அமைவது தான் இலட்சியம் வீரனின் மரண சாசனம்.

—அண்ணா

தேர்தல்புரி யாத்திரை

பி.எஸ்.இளங்கோ

7

ஜாதியில்லையடி பாப்பா! ஜாதியில்லையடி பாப்பா!

"வாங்க சுப்பண்ணு, வாங்க! அடடே! முதலியார் தம்பியா? நான் கவனிக்கவே இல்லையே! உக்காருங்க, உக்காருங்க" தனசேகரம் பிள்ளை வந்தவர்களுக்கு இப்படி ராஜ உபச்சாரம் செய்து கொண்டிருந்தார்!

"என்ன விசேஷம்? ஊரெல்லாம் எப்படி இருக்குது?" தனசேகரம்பிள்ளை மெதுவாகப் பேச்சை ஆரம்பித்தார்!

"உங்களுக்குத் தெரியாமல் என்ன விசேஷம் இருக்கப் போவுது? உங்க விசேஷம் தானே ஊரிலே பெரிய விசேஷமாக இருக்குது!" சுப்பண்ணு புகழ் மாலை சூட்ட ஆரம்பித்தார்!

"அப்படி என்னுங்க நான் பெரிய விசேஷத்தைச் செய்து விட்டேன்"? தனசேகரம் பிள்ளையின் உள்ளம் உள்ளுக்குள் மகிழ்ந்து கொண்டிருந்தது!

"என்னவா? இதைவிட இன்னும் என்ன செய்ய வேணும்? என்ன தான் செய்ய முடியும்?" சுப்பண்ணுவுக்கு காரியத்தின் மீது ஒரு கண் இருக்கத்தான் செய்தது!

"எதைச் சொல்றீங்க சுப்பண்ணு!" அவருடைய முகம் செந்தாமரையைப் போல் மலர்ந்திருந்தது!

"உங்களுடைய வள்ளல் தன்மையைத் தான் சொல்றேன்! இந்த காலத்தில் உங்களைப் போல் யாரவது வள்ளல் பெருமான் இருக்க முடியுமா?"

"ஓகோ! நான் பூதானம் செய்ததைப்பற்றி சொல்லுறீங்களா?"

"ஆமாம், பிள்ளைவாள் ஆமாம்! கூலிக்காரன்னு பார்க்காமே இப்படி நிலத்தையெல்லாம் யார் தானம் செய்வார்கள்!" சுப்பண்ணுவின் புகழுக்கு எல்லையேயில்லை!

'மக்கள் வாழ்ந்தால் தான் மன்னன் வாழ முடியும்—குடிகள் வாழ்ந்தால் தான் நானும் வாழ முடியும்!'

"ஆகா! இந்த மனசு வருனுமே!"

"எல்லாம் காந்தியடிகள் போதித்த போதனை!" தான் யார் என்பதை தனசேகரம் பிள்ளை மெதுவாகக் காட்டிக் கொள்ள ஆரம்பித்தார்!

"அந்த அவதார புருஷரைத் தான் சுட்டு கொண்ணுட்டான்களே—படுபாவிகள்!" சுப்பண்ணுவின் கண்ணில் தண்ணீர் தான் வரவில்லை!

"அவர் இருக்கிறதை விட இறந்து போனதே மேல்!" தனசேகரபிள்ளை எதையோ எண்ணிக் கொண்டு—சொல்லுகிறுர் என்பதை சுப்பண்ணு புரிந்து கொண்டார்!

"என்ன அப்படி சொல்றேள்!"

"இண்ணைக்குகாங்கிரஸ் இருக்கிற நிலையைப் பார்க்காமலேயே அவர் கண் மூடி விட்டது அவர் செய்த புண்ணியம் தான்!"

"உங்களைப் போன்ற புண்ணியாத்துமாக்களைப் பார்க்கவாவது அவர் உயிரோடு இருந்திருக்கக் கூடாதா?"

"நீங்க ஊரிலே பெரிய மனுஷா பரம்பரை பரம்பரையாக கதர் வஸ்திரம் உடுத்தி, காந்தியைப் போல் வாழ்ந்து வர்ரீள்! நீங்க ஏன் இதை யெல்லாம் கவனிக்கக் கூடாது!" சுப்பண்ணு தூபம் போட்டார்!

"நம்முடைய மதிப்பும், அந்தஸ்தும் யாருக்கு தெரியுது? உமக்கு தெரியுது, எனக்குத் தெரியுது—ஊருக்குத் தெரியலியே!" தனசேகரம்பிள்ளை மனவருத்தப் பட்டுக் கூறினுர்!

"அப்படி யெல்லாம் சொல்லாததேள்—எல்லோருக்கும் தெரிஞ்சு தான் இருக்கும்!"

"என்னத்த தெரிஞ்சு இருக்கு! உப்பு சத்தியாக்கிரகம் பண்ணினேன், ஆகஸ்டு கலவரத்தில் ஈடுபட்டு தண்டவாளத்தைப் பெயர்த்தேன். ராஜாஜி, நேருஜி போன்ற தலைவர்களோடு ஜெயில் வாசம் செய்தேன்! என்ன புண்ணியம்? மூணு தடவை முனிசிபாலிட்டி எலக்ஷனில் நிண்ணு தோத்தது தான் கண்ட பலன்!" தனசேகரம்பிள்ளை தன்னுடைய நிலையை கச்சிதமாக எடுத்துச் சொன்னுர்!

"வருத்தப்படாதீர், பிள்ளைவாள்! ஆண்டவன் உமக்கு ஒரு குறைவும் வைக்க மாட்டான்!" ஆசீர்வாதம் செய்தார்!

"முதலியார் தம்பி என்ன பண்ணுது?" தனசேகரம்பிள்ளை சுப்பண்ணுவைப் பார்த்துக் கேட்டார்!

"தம்பியைத் தெரியுமில்லே!" சுப்பண்ணு காரியத்தில் இறங்க ஆரம்பித்தார்!

"ஓ, நல்லா தெரியுமே! ஏன் தம்பி, அப்பா சௌக்கியமா? நீ ஏதாவது உத்தியோகம் கித்தியோகம் பார்க்கிறியா?" தனசேகரம் பிள்ளை, சுப்பண்ணுவோடு வந்தவரைப் பார்த்துக் கேட்டார்!

"தம்பி ஒண்ணும் உத்தியோகம் பார்க்கலே! உத்தியோகம் பார்க்கலே என்பதைவிட பிடிக்கலே என்று தான் சொல்லணும்" சுப்பண்ணு குறுக்கிட்டு பதில் சொன்னுர்!

"பின்ன என்ன பண்ணிக்கிட்டு இருக்கு!" தனசேகரம் பிள்ளை விவரம் கேட்டார்!

"தம்பி தான் அடுத்த மந்திரி!" சுப்பண்ணு விளக்கம் சொன்னுர்!

"என்ன சொல்லுறீர்?" தனசேகரம்பிள்ளையின் உள்ளம் துடித்தது!

"தம்பி தான், இந்த ஊர் இளைஞர் காங்கிரஸ் முன்னணியின் தலைவர்! அடுத்தத் தேர்தலில் இவர்தான் நிற்கப் போகிறுர்!" சுப்பண்ணு மகிழ்ச்சியோடு இதைச் சொல்லி வைத்தார்!

"அப்படியா சுப்பண்ணு? யார் சொன்னது?" தனசேகரம் பிள்ளையின் உள்ளம் எரிமலையாகிக் கொண்டிருந்தது!

"எல்லாம் மேலிடம் தான் முடிவு செய்திருக்கிறது!" சுப்பண்ணு காரியம் முடிந்து விட்டதாக மகிழ்ந்தார்!

"நிஜமாவா?" தனசேகரம் பிள்ளை ஆவலோடு கேட்டார்!

"இந்தத் தேர்தலிலே காங்கிரஸ் ஜெயிக்கிறது ரொம்ப கஷ்டம்! அதனுல் தான் பெரிய டணக்காரர்களாய்ப் பார்த்து, நல்லா பேசக் கூடிய இளைஞர்களாகப் பொறுக்கி எடுத்திருக்கிறுர்கள்" சுப்பண்ணு விஷயத்தைப் புட்டுப் புட்டு வைத்து விட்டார்!

"என்னுல் நம்பவே முடியவில்லையே சுப்பண்ணு! சின்ன வயசு பையன்களையா எலக்ஷனில் நிக்க வைப்பாங்க!" தனசேகரம் பிள்ளையின் ஆசை எதை' எதையோ கேட்கச் சொல்லுகிறது!

"ஏன்? அவாளும் சின்னபசங்களைத் தானே நிறுத்தப்போகிறு?" சுப்பண்ணு சந்தேகத்தைப் போக்க முனைந்தார்!

"எவாள் சுப்பண்ணு!"

"அவா தான் அண்ணுத்துரை கட்சிகாரவா?"

"அதனுலே...?"

"நம்மளும் அப்படி நிறுத்தினு தான் ஜெயிக்க முடியும் என்று இவாளும் நெனைக்கிறு?

"அப்படியா! ரொம்ப சந்தோஷம்!" தனசேகரம்பிள்ளையின் பேச்சில் கவலை தொக்கி தான் நின்றது!

"தம்பி, மந்திரியா வந்தா கூட, எல்லாம் ஓங்க அதிகாரம் தானே இருக்கப் போவுது?" சுப்பண்ணு ஏதோ சூசகமாகப் பேச ஆரம்பித்தார்!

"அதெப்படி, சுப்பண்ணு!" தனசேகரம்பிள்ளைக்கு கொஞ்சம் ஆச்சரியமும் ஏற்பட்டது!

"மருமகன் மந்திரியா இருந்தா, மாமா அதிகாரம் செய்யாமலா போவா?" சுப்பண்ணு விளக்கியே சொல்லி விட்டார்.

"சுப்பண்ணு! என்ன இது!" தனசேகரம்பிள்ளை கோபக் கனலை வீசினுர்!

"கோபிச்சிக்காதேள்! நம்ம கொழந்தை மீது தம்பிக்கு ஒரு பிரியம்!"

"இம்... அப்புறம்!"

"தம்பிக்கு சொத்து-இருக்குது, அந்தஸ்து இருக்குது, நாளைக்கு மந்திரியாகவும் வரப் போவது?" சுப்பண்ணு கொஞ்சம் நடுக்கத்தோடு தான் கூறினுர்!

"அதனுலே... சுப்பண்ணு! அதனுலே..!"

"நம்ம கொழந்தையை..."

"கோலம், கோத்திரம் தெரியாத பசங்களிடம் தள்ள சொல்லுறியா?"!

"என்ன அப்படி சொல்றேள்! தம்பி தாழ்ந்த குலமா? முதலியார், அதுவும் தொண்ட மண்டல முதலியார்" சுப்பண்ணுவின் முகத்திலிருந்து வியர்வைத் துளிகள் பொட்டுப் பொட்டாக கீழே விழுந்து கொண்டிருந்தன!

ஓய் சுப்பண்ணு! நான் என்ன கோலம் தெரியுமா?"

"ஓ, தெரியுமே! சோழியம் பிள்ளை!"

"சுப்பண்ணு! உன் புத்தியைக் காட்டி விட்டியே!"

"என்ன பிள்ளைவாள்! அப்படியெல்லாம் நான் தப்பா ஒரு நாளும் நடந்து கொள்ள மாட்டேன்!" சுப்பண்ணு நாணயத்தை சாட்சிக்கு இழுத்தார்!

"யார் சொன்னது நான் சோழியப் பிள்ளை என்று!" தனசேகரப்பிள்ளைக்கு உச்சி முதல், உள்ளங்கால் வரை கோபம் பொங்கிக் கொண்டு வந்தது!

"என்ன பிள்ளைவாள்! உங்க தோட்டனுரைத் தெரியும், அவருடைய தோட்டனுர்—அதாவது உங்க பாட்டனுர் இந்த ஊர் கொளத்தை குத்தகைக்கு எடுத்து மீன் பிடித்ததும்தெரியும்!"

"அதிகப் பிரசங்கி! போ வெளியே!"

"பிள்ளைவாள் கோபிச்சிக்காதேள்! இது நல்ல சம்பந்தம், உமக்கு கிடைக்காத சம்பந்தம்!"

"எல்லாம் எனக்குத் தெரியும்! போ!"

(7-ம் பக்கம் பார்க்க)

வெள்ளைக்காரன் காலத்திலேயே திராவிட நாடு உருவாயிற்று!

காமராஜர் முதலமைச்சராக வந்த பிறகல்ல!

(அண்ணா பேச்சு)
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னர்.

பின் அறிஞர் அண்ணா அவர்கள் பலத்த கை ஒலிகளுக்கிடையே சொற்பொழி வாற்றியதாவது:–

அன்புள்ள தலைவர் அவர்களே அருமை நண்பர்களே! தாய்மார்களே.

இந்த வட்டத்தில் மாண்ட மாவீரன் இராசவன் பெயரால் ஒரு நூலகம் அமைக்கப்பட்டு இங்கு திறம்பட பணியாற்றி வரும் இம்மன்றத்தின் ஆண்டு விழாவில் கலந்து கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தமைக்கு மகிழ்ச்சியடைகிறேன். அவர்கள் ஆற்றி வரும் தொண்டினை மனமாரப் பாராட்டுகிறேன். அதற்காக என் வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கூட்டம துவங்குவதற்கு முன்பு இம்மன்றத்தார் வெளியிட்டுள்ள ஆண்டறிக்கையையும் படித்தார்கள். அந்த அறிக்கையில் அவர்கள் ஆற்றி வரும் தொண்டினை விளக்கி யிருக்கிறார்கள். எனக்கு முன் பேசிய நண்பர்கள் கூட்டம் துவக்குவதற்கு ஏற்பட்ட இடையூறுகளைப் பற்றியும் அதனால் ஏற்பட்ட தவிர்க்க முடியாத தவக்கத்தையும் உங்கள் முன் பேசினார்கள். நான் அதை தடுத்து நடந்து போன விஷயத்தைப் பற்றிப் பேச வேண்டாம் நடக்க வேண்டிய சாரியத்தைப் பற்றிப் பேசுவோம். சின்னஞ்சிறு இடையூறுகளைக் கண்டு நாம் ஆயாசப்பட்டு நாம் அடைய வேண்டிய மகிழ்ச்சிக்கு தடையேற்படுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொண்டேன். எனது வேண்டுகோளை ஏற்று அவர்கள் பேசுவதை நிறுத்திக் கொண்டார்கள்.

ஒருவர் பெண் பார்க்க 10 ஊர்கள் சுற்றி பெண் பார்த்து திருமணம் நிச்சயித்து மணமக்களை மணவரையில் அமர வைத்து அதைப் பார்த்து மகிழ வேண்டிய நேரத்தில் துவக்கத்தில் பெண் பார்ப்பதற்கு ஏற்பட்ட இடையூறுகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தால் மகிழ வேண்டிய மகிழ்ச்சிக்கு இடைஞ்சல் ஏற்படுவது போல்–குந்தகம் ஏற்படுவது போல் இங்கு கூட்டம் நடத்துவதற்கு மின்சாரம் வருவதற்கேற்பட்ட தடங்கலைப் பற்றி பேசினால் நாம் செய்ய வேண்டிய காரியங்களுக்கு தடையேற்படும். நாம் கொண்டிருக்கும் எண்ணங்களை–கருத்துக்களை சில்லரை விஷயங்களில் கவலை செலுத்தினால் நாம் மக்களிடம் எடுத்து வைக்க வேண்டிய பல விஷயங்களை எடுத்து வைப்பதற்கு தாமதமும் தடங்கலும் ஏற்படும்.

நாம் எடுத்துக் கொண்ட காரியங்களுக்கு மக்களிடம் கூற வேண்டிய ஆதாரங்கள் பல இருக்கிறது. நாம் மக்களுக்கு விளக்க வேண்டிய பல விஷயங்கள் நம் முன்னே இருக்கிறது. அதற்கு நேரமில்லை சிறு விஷயங்களில் கவனம் செலுத்தினால்–சில்லரை இடையூறுகளை நாம் பொருட்படுத்தினால் நாம் போக வேண்டிய இடத்திற்குப் போக முடியாது.

ஒரு பெண் மண் காற்றில் கூடையை தலை மேல் வைத்துக் கொண்டு இடுப்பிலே செல்லக் குழந்தையை வைத்துக்கொண்டு செல்லுகிறாள். காற்றினால் வீசுகின்ற மண் கண்ணிலே விழுகின்றது குழந்தை காற்றின் கொடுமையாலும் மண் வீசுவதாலும் அலங்கோலமாகி அழுகிறது! காற்றடிக்கும் வேகத்தால் ஆடை அலங்கோலமாகிறது. தலையிலிருக்கின்ற கூடையோ விழுகின்ற நிலையிலிருக்கிறது. தாய் என்ன செய்வாள் கூடையும் விழாமல் பார்த்துக் கொள்கிறாள். தன் அருமைக் குழந்தை அழாமல் பார்த்துக் கொள்கிறாள். அலங்கோலமாகி வரும் ஆடையையும் செப்பனிடுகிறாள். இடையில் பாதையில் நடந்து வருவோர் கண்ணில் மண் விழுவதால் அறியாமல் மோதுவதையும் பொறுத்துக் கொள்கிறாள். ஏன்? அவளுக்கிருக்கின்ற கடமை உணர்ச்சியால் அந்தத் தாய் பொறுமையிழந்து கடமையை மறந்து தன் தலை மீது இருக்கின்ற கூடையைப் போட்டு விட முடியுமா? அல்லது தன் இடுப்பிலே அமர்ந்திருக்கும் "அருமைக்கு குழந்தையைத் தான் இறக்கி விட்டுச் செல்ல முடியுமா? வீட்டிற்குச் சென்ற பின் தலையிலிருக்கின்ற கூடையை இறக்கி விட்டு தன் குழந்தையின் உடம்பிலே படிந்திருக்கிற மண்ணைத் துடைத்து விட்டு தன் ஆடையையும் சரிப்படுத்திக் கொண்டுகுழந்தையைக் கண்டு மகிழ்ச்சி யடைவாள்.

அதைப் போன்று இன்று நம் நிலைமையையும் நாம் வெகு தூரம் பயணம் செல்ல வேண்டும்! நம் தலையிலும் கூடை இருக்கிறது. அது தான் இப்போதுள்ள ஆட்சி, நம் இடுப்பிலிருக்கும் குழந்தை தான் நம்மால் நடேங்கிலும் போற்றி வளர்க்சப்பட்டு வரும் திராவிட நாட்டுக் கொள்கை என்ற குழந்தை. நமக்கு இடையிலே மண் காற்றும் வீசி இடையூறுகள் விளைவித்துக் கொண்டிருக்கிறது. அதனால் நாம் நம் குழந்தையை வழியிலே இறக்கி விட்டுச் சென்று விட முடியுமா?

நாம் எடுத்துக் கொண்ட காரியம் நிறைவேறும் வரை அந்த தாய்குழந்தையைக்காப்பாற்றியது போல் நாமும் நம் திராவிட நாடு என்ற குழந்தையைக் காப்பாற்ற வேண்டாமா? ஒரு சில தாய்மார்கள் இருக்கலாம். குழந்தையை மண் காற்றிற்காசப் பயந்து இறக்கி விட்டு வரலாம். கூடையை வைத்து விட்டு வரலாம் நாம் நம் செல்லக் குழந்தையாகிய திராவிட நாட்டுக்கு குழந்தையை எவ்வளவு மணல்காற்றுவீசினாலும் நாம் காப்பாற்றியாக வேண்டும்.

நமது முதலமைச்சர்காமராசர் கூறுகிறார். குழந்தையை இறக்கி விடுங்கள் என்று அவருக்கு அந்த அருமை தெரியாததால் அவர் அப்படிக் கூறுகிறார். அவருக்கு மேற்கண்ட கதை தெரிவதற்கு வழி இல்லை. அதனால் அவர் அப்படிக் கூறுகிறார்.

எனதருமை நண்பர் எம். எஸ் இராமசாமி அவர்கள் பேசும் போது சொன்னார். நானும் காமராசரும் சிறுவயதிலிருந்தே நண்பர்கள் அவர் திராவிட நாட்டுப் பிரச்சனையைப் பற்றி தெரியாத முறையில் பேசி வருகிறார் என்று, தோழர் ராமசாமி பேசியதில் சிறு தவறு இருக்கிறது. தோழர் இராமசாமி காமராசருடன் இது நாள் வரை பழகி அவரைப் பற்றி தெரிந்து கொள்ள முடியவில்லை, அமைச்சர் காமராசர் வேறு எதைப் பேச முடியும். இதைத் தான் பேசுவார்.

நமது முதலமைச்சர் காமராசர் நம்மைப் பார்த்துதிராவிட நாடு எங்கே இருக்கிறது ஆந்திரம் தனி மாநிலமாகிவிட்டது. கன்னடம் தனிநாடாகி விட்டது கேரளமும் பிரிந்துவிட்டது, எப்படி திராவிட நாடு கிடைக்கும் என்று கேட்கிறார், இதற்கு நாம் காமராசருக்கு விளக்கம் சொல்வதைவிட பணிவன்புடன் அவருக்கொரு வேண்டுகோள் விடுக்கிறேன். நம் பொதுச் செயலாளர் நாவலர் நெடுஞ்செழியன் பேசுகின்ற ஒரு கூட்டத்திற்கு ஒருதடவை சென்று கேட்கும்படி கூறுவதே எனது வேண்டுகோள். காமராசர் நேராக கூட்டத்திற்குச் செல்லவேண்டாம், ஒரு மாடி வீட்டில் மாடி மீது ஏறிப்பார்க்கவும். மறைவாக இருந்தே நாவலர் திராவிட நாட்டு பிரச்சனையைப்பற்றிப் பேசுகின்ற விளக்கங்களையும். கையை கூட்டி குறைத்துக் காட்டும் அபிநயங்களை—சைகைகளை பார்க்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

காமராசர் மாநிலம் பிரிந்து போய் விட்டது என்று கூறி நம்முடைய திராவிட நாட்டுப் பிரச்சனையை குறை கூறுகிறார், இது எதைககுறிக்கிறது என்றால் ஒரு கணவர் காலையில் சாப்பிட்டு விட்டு அலுவலகத்திற்கு வேலைக்குச் செல்வதற்கு முன் அருமைக் குழந்தையின் கன்னத்தைச் செல்லமாக கிள்ளி வட்டு பனைவியிடம் விடைப் பெற்று கணவன் செல்லும்போது மனைவி முந்தானையால் கண்ணை துடைத்துக் கொண்டிருக்க மாட்டாள் தன் அருமை கணவன் எப்போது அலுவலகத்திலிருந்து மாலையில் வருவான் என்று ஆவலோடு கணவன் வரவை எதிர்ப்பார்த்துக் கொண்டிருப்பாள். அது போன்றே திராவிடநாடு என்ற கூட்டாட்சியை நிறுவவேண்டுமென்று நாம் சொல்லுகிறோம் கன்னடமும் ஆந்திரமும் கேரளமும் தங்கள் மொழிவழி மாநிலங்களாகப் பிரிந்து தங்களது ஆட்சியைச் செய்து வருகிறது. மற்றபடி பொதுவான வகையில் நான்கும் தங்கள் உரிமைக்கு பங்கம் ஏற்படாமல் கூட்டாட்சியாக இருககவேண்டு மென்றே கூறுகிறோம் இதைக் காமராசர் புரிந்துக் கொள்ளாமல் நம்மை கேலி பேசுகிறார். நமது காமராசருக்கு உள்ளொன்று வைத்துப் புறமொன்றுப் பேசும் வழக்கமுல்லை. அவர் அவ்வாறு பேசவும் மாட்டார். ஏனெனில் உள்ளத்தில் இருந்தால் தானே அதை புறத்தில் பேச முடியும். ஆதலால திரு எம். எஸ். ராமசாமி காமராசர் பேசுவதைக் கண்டு ஆயாசப்பட வேண்டாம்.

முதலமைச்சர் காமராசர் செல்லுகின்ற இடங்களிலெல்லாம் திராவிட நாடு பிரிவினை பெரியார் ,ராமசாமி கோபத்தால் உண்டாக்கியதென்றும் இப்போது அவர் தமிழ்நாடு பிரிய வேண்டுமென்றும் கேட்கிறார் அதையே நாம் விடாது சொல்லி வருகிறோம் என்றும் நாம் திராவிடர் கழகத்தில் சேர்ந்து விடலாமென்றும் சொல்லி வருகிறார்.

எவர் மீதும் ஏற்பட்டகோபத்தால் உண்டானதல்ல திராவிட நாட்டுப் பிரச்சினை காங்கிரஸ்காரர்கள் ஆட்சிக்கு வந்தபின் கூறப்பட்ட கொள்கையல்ல திராவிட நாட்டுப் பிரச்சினை வெள்ளைக்காரர்கள் ஆண்டு கொண்டிருந்த காலத்திலேயே வகுக்கப்பட்டு மககளிடம் எடுத்துக் கூறி வரும் ஒரு புனிதக் கொள்கையாகும்.

காமராசர் பழைய அரசியலை புரிந்து கொள்ளாமல், தெரியாத விஷயத்தைக் குழப்பி பேசி வருகிறார்.

(9-ம் பக்கம் பார்க்க)

(தேர்தல்புரி யாத்திரை)
(6-ம் பக்கத் தொடர்ச்சி)

தனசேகரம்பிள்ளையின் கண்கள் கோவைப் பழம் போல் செவந்திருந்தது! உள்ளம் பட பட வென்று அடித்துக் கொண்டிருந்தது!

"சம்மந்தியாம், சம்பந்தி! மந்திரி வேலையாம், மந்திரி வேலை! நான் ஊருக்கு உழைப்பது, நிலத்தையெல்லாம் தானம் செய்து, கட்சிக்கும், கட்சியிலுள்ள அன்னக் காவடி தலைவர் பசங்களுக்கும் புகழைத் தேடித் தருவது, மந்திரி வேலை மட்டும், தேர்தலில் நிற்பது மட்டும் ஊரிலுள்ள பரதேசிபசங்களா? இருக்கட்டும், இருக்கட்டும் பார்த்து விடுகிறேன்—காங்கிரஸ்! தலைவர்களாம், தலைவர்கள்! எல்லோரையும் ஒரு நொடிப் பொழுதில் அழித்து விடுகிறேன்!

இதற்காகவா கட்சி மாறினேன், இதற்காகவா காசு, பணத்தை வாரி இறைத்தேன்! இதற்காகவா மந்திரிகளை வரவேற்றேன், மாலை சூட்டி பாராட்டினேன்! அவர்கள் செய்த அக்கிரமங்களுக்கும் அநியாயங்களுக்கும் உடைந்தையாக இருந்தேன்!

"நான் மந்திரி.. இல்லை என்றால் இந்த காங்கிரஸ் இல்லை, நிச்சயமாக இந்த காங்கிரஸ் இல்லை!

நான் யாத்திரை கிளம்பி விட்டேன், என்னுடைய தேர்தல் புரி யாத்திரையில் நரிகள் ஊளை யிட்டாலும் காங்கிரஸ் ஓநாய்கள் கத்தினாலும் நிற்காது நிற்கவே நிற்காது!

தனசேகரம்பிள்ளை பசித்த வேங்கையைப் போல் உறுமிக் கொண்டிருந்தார்!

(வளரும்)

தேர்தலில் நம்மை வீழ்த்த மந்திரிகள் முதலாளிகளிடமும்-படாதிபதிகளிடமும் சரணடைகிறார்கள்!

கோடீஸ்வரர்கள் அங்கே! தூக்கு மேடை யேறி தூக்குக் கயிற்றை முத்தமிடும் வீரர் பட்டாளமிங்கே!

சென்னையில் கலைஞர் கருணாநிதி சங்கநாதம்!



சென்னை திருவல்லிக்கேணி 72-வது வட்டம் டாக்டர் தருமாம்பாள் நினைவு மன்ற முதலாவதாண்டு விழாவும். தேர்தல் நிதி உண்டியல் துவக்க விழாவும் 22-5-60ம் தேதி மலை நாகப்பையர் தெருவில் ஒரு மாபெரும் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தை முன்னிட்டு அழகான மேடை அமைக்கப் பட்டு தெருவெல்லாம் அலங்காரம் செய்யப்பட்டு பல வித வண்ணமின் விளக்குகள் போடப்பட்டிருந்தது.

கூட்டத்திற்கு ஏராளமான மக்கள் வந்து கூடியிருந்தார்கள். கூட்டத்திற்கு டி. லோகநாதன் தலைமை வகித்தார்!

தோழர்கள் முல்லை சக்தி, பிச்சை முதலிய பலர் பேசினார்கள்?

பின் கலைஞர் மு. கருணாநிதி நீண்ட கை ஒலிகளுக்கிடையே பேசியதாவது.

அன்புள்ள தலைவர் அவர்களே! பெரியோர்களே! நண்பர்களே! தாய்மார்களே!

இன்று இங்கு இவ்வளவு சிறும்சிறப்புடனும், எழிலுடனும் மிக்க மகிழ்ச்சியுடனும் நடைபெறும் காலஞ்சென்ற தருமாம்பாள் நினைவுமன்ற முதலாவது ஆண்டு விழாவிலும், நமது தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் விடுத்த ஆணைக்கிசைந்து தேர்தல நிதி உண்டியல் திறப்பு விழாவிலும் நான் கலந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்தமைக்கு மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். எனது நன்றி கலந்த வணக்கத்தை இம்மன்றத்தாருக்கு முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று ஆங்கு நடைபெறும் இந்த சிரிய பணியைக் கண்டு நான் மிகவும் மகிழ்ச்சி யடைகிறேன்.

இதை போன்றே இங்குள்ள அனைவரும் மகிழ்ச்சி யடைவார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் இந்த நாட்டில் ஆற்றி வரும் பணிகளைப் பற்றியும், அதனுடைய கொள்கைகளை நாட்டு மக்களிடத்திலும், தாய்மார்களிடத்திலும் நல்ல முறையில் பிரச்சாரம் செய்து பணியாற்றி வந்த டாக்டர் தருமாம்பாள் அவர்களின் பெயரால் இந்த மன்றத்தைத் துவக்கி நற்பணி செய்து வரும் அருமை நண்பர்கள் வாயளவிலே இல்லாது செய்கை யளவில் பாடுபட இன்று இந்த உண்டியல் திறப்பு விழாவை ஏற்பாடு செய்திருக்கிறார்கள் அதற்காக அவர்களை பாராட்டுகிறேன் அவர்கள் சிரிய தொண்டு வெற்றிபெற உங்கள் ஆதரவும், ஒத்துழைப்பும் கொடுக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்

"உண்டியலில் காசு தருகிறோம் தேர்தல் நிதி கொடுக்கிறோம் என்று வாயளவில் கூறி வருவதால் மட்டும் பயனில்லை. அதைச் செய்கையில் காட்ட வேண்டும் அந்தமுறையில் தான் இன்று உண்டியல் திறககப்படுகிறது.

உண்டியல் திறப்பது என்பது உண்டியலின்மீது போர்த்தப் பட்டிருக்கும் பட்டுத்துணியை அகற்றி விடுவதால் மட்டும் உண்டியல் திறந்ததாகாது. உண்டியலில் காசுகள் போட்டு திறந்தால்தான் உண்டியல் திறநததாகும் ஆகவே இந்தஉண்டியலில் காசுகள் போடுவதற்காக உங்களிடம் தோழர்கள் வருகிறார்கள். அவர்களிடம் காசுகள் போட்டு உங்கள் ஆதரவைத் தெரிவிககவேண்டுகிறேன்

நீங்கள் வரும் தோழர்களிடம் போட்டு அனுப்பும் பணத்தை நான் எனது சாதாரணமான கையால் இந்த உண்டியலில் போடுவேன், அப்போது உங்கள் எண்ணம் பூரிக்கும் நீங்கள் மகிழ்ச்சியுடன் அந்தக்காட்சியைக் காண்பீர்கள் ஆனால் இந்தக்காட்சியை நான் காசுகளை உண்டியலில் போடும் நிகழ்ச்சியை மறைவாக ஓரமாக நின்று பார்க்கும் காங்கிரஸகாரர்கள் மருட்சியடைவார்கள், மருளுவார்கள். அந்த நல்ல காரியத்தை செய்யவேண்டுமென்று உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். நமது எண்ணம் நிறைவேற வெற்றிபெற உங்கள் ஒத்துழைப்பு மிகவும் தேவை. ஆகையால் வருகின்ற தோழர்களிடம் உங்களிடம் உள்ளதைப் போட்டு ஆதரவு தர வேண்டுகிறேன்.

நமது அறிஞர் அண்ணா அவர்கள் நாம் தேர்தலில் ஈடுபட வேண்டுமானால், தேர்தலில், காங்கிரஸ்காரர்களைத் தோர்கடித்து நாம் வெற்றி பெற வேண்டுமானால் உண்டியலில் காசு சேர்த்து தேர்தல் நிதிக்குப் பணம் தாருங்கள் என்று மேடைகளிலும் ஏடுகளிலும் எழுதிவந்தார். அதை மக்களிடம் அன்றாடம் தெரிவித்து வந்தார்,

அறிஞர் அண்ணா அவர்கள் சொல்லி வந்ததை ஆதரித்து ஆரம்பத்திலிருந்து அதை வற்புறுத்தி வீட்டுக்கொரு உண்டியல் வைக்கவேண்டுமென்றும் உண்டியல் வைத்து ஊராள்வோரை விரட்ட வேண்டுமென்றும், உடனே உண்டியல் வைத்து அறிஞர் அண்ணா அவர்கள் எண்ணத்தை நிறைவேற்ற வேண்டுமென்றும் இடைவிடாது எழுதி வந்த பெருமை என தருமை நண்பர் பி. எஸ். இளங்கோவால் நடத்தபடும் மாலை மணியைச் சாரும்

மாலைமணி தன் கடமையில் நழுவாது நாளிதழ்கள் ஆற்ற வேண்டிய பணியைவிட மிகச் சிரிய பணியை செய்து வந்திருக்கிறது, இனி மேலாகிலும் நமது இயக்கப்பத்திரிகைகள் எல்லாம் மாலைமணி செய்து வந்த அந்த சிரிய தொண்டினைச் செய்ய வேண்டும்—செய்வோம்

அப்படி நமது ஏடுகள் எல்லாம் செய்தால் இன்று இந்த வட்டத்திலுள்ள நமது நண்பர்கள் உண்டியல் வைத்தது போன்று மறற வட்டங்களிலும் உண்டியல் வைத்து நமது ஆட்சியத்தை நிறைவேற்றுவார்கள்

இவ்வளவு சிறப்பாக இநத விழா நடைபெறும் இந்த நேரத்தில் மாலைமணிக்கும் அதன் ஆசிரியருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்

நாம் இங்கே உங்களிடம் உண்டியலில் பணம் சேர்க்கிறோம். "காசுகள் தாரீர்" என்று உங்களிடமிருக்கும் குறைநத காசுகளைக் கேட்கிறோம் நிதிமிகுந்தவர், நிதிகள் தாரீர், அதுவுமற்றவர் காசுகள் தாரீர்! அதுவு மற்றவர் வாய் சொல் தாரீர் என்றபடி உங்களால் முடிந்த இரண்டு காசுகள், மூன்று காசுகளை உண்டியலில்சேர்த்து

(11-ம் பக்கம் பார்க்க)

(அண்ணு பேச்சு)

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

காமராசரோ, பக்தவத்சலமோ, வெங்கிட்டராமனோ பதவியிலிருக்கிருர்கள் என்ற மன எரிச்சலாலோ, காங்கிரஸ் ஆட்சி பீடத்திலிருக்கிறதென்ற வெறுப்பாலோ மன எரிச்சலாலோ பொச்செரிப்பாலோ, கோபத்தாலோ, அழுக்காற்ருலோ திராவிட நாடு கோரிக்கை வரவில்லை.

காங்கிரஸ் இந்த நாட்டை ஆளுமென்று சனவில் கூட கருதாத நேரத்தில் காமராசரும் தக்களும், பக்தவத்சலமும் மந்திரிகளாவார்களா என்று சிந்தித்திருக்காத நேரத்தில் ஆருடக்காரனுக்குக் கூட தெரிந்திருக்காத காலத்தில் திராவிட நாட்டுப் பிரச்சினையை வகுக்கப்பட்டது.

இந்த நாட்டை வெள்ளைக்காரர்கள் ஆண்டு கொண்டிருந்த காலத்தில் சுதந்திரமோ, சுயராஜ்யமோ கிடைக்குமென்று நம்பாதிருந்த நேரத்தில் திராவிட நாடு பிரியவேண்டுமென்று கேட்கப்பட்டது.

காங்கிரஸ் சுதந்திரப் போரில் ஈடுபட்டிருந்த காலத்தில் விடுதலை வேண்டுமென்று கிளர்ச்சி செய்த நேரத்தில் இந்த நாட்டை வடவர்கள் கையில் ஒப்புவிக்கக் கூடாது. சுதந்திர திராவிட நாடு கொடுக்கவேண்டுமென்று அன்று இங்கிலாந்திலிருந்து வந்த வெள்ளைக்கார நிபுணர்களிடம் நாம் கூறியிருக்கிருேம்.

ஜஸ்டிஸ்கட்சியாக இருந்த போது நான்கு மாநிலங்களும் ஒன்று சேர்ந்த ஒரு தனி கூட்டாட்சி கொடுக்க வேண்டுமென்று திருவாரூரில் நடைபெற்ற தென்னிந்திய நலவுரிமைச் சங்க மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

அந்த மாநாட்டில் இன்னுமொரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. ஆந்திரம், கன்னடம், கேரளம் தமிழ் பகுதியிலுள்ள திராவிட மக்கள் எல்லாம் குடி மதிப்பு கணக்கு (சென்சஸ்) எடுக்கும் போது தங்களை திராவிடர்கள் என்றே கூற வேண்டு மென்று தீர்மானம் நிறை வேற்றப்பட்டிருக்கிறது. இதை யெல்லாம் காமராசர் புரிந்து கொள்ளாது திராவிட நாட்டுப் பிரிவினை கோபத்தால் உண்டானது என்று கூறுவது அரசியல் புரியாதது தான்!

சுதந்திரம் இந்த நாட்டிற்கு கொடுப்பதைப் பற்றி இங்குள்ள தலைவர்களிடம் ஆலோசிப்பதற்காக இங்கிலாந்திலிருந்து சர். ஸ்டாப்போர்டு கிரிப்ஸ் துரை மகனும், ஹூப்ஸ் துரை மகனும் இந்நாட்டிற்கு வந்திருந்த பொழுது, சுதந்திர திராவிடக் கூட்டாட்சி நமக்கு வேண்டுமென்றும், இந்தியாவோடு இணைந்திருக்க மாட்டோம் என்றும் அப்பொழுதே அவர்களிடம் கூறி இருக்கிறோம்.

காமராசர் கூறி வருவதையும் நாம் கூறுவதையும் இங்குள்ள நல்ல காங்கிரஸ்காரர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தேர்தலுக்காக இருக்கின்ற காங்கிரஸ்காரர்களிடம் நான் இதைக் கூறவில்லை திருவல்லிக்கேணி வட்டாரத்தில் தியாகங்கள் பல புரிந்து உண்மையாகப் பாடுபட்ட மிச்சம் மீதி இருக்கும் காங்கிரஸ்காரர்களிடம் தான் இதைக் கூறுகிறேன்,

திராவிட நாடு பிரிய வேண்டுமென்று இன்று நேற்று நாம் கூறி வரவில்லை. திராவிடர் கழகம் என்று ஏற்பட்டதோ அன்று முதல் பிருந்தே நாம் திராவிட நாட்டுப் பிரிவினையை வற்புறுத்தி வந்திருக்கிறோம்,

ஜஸ்டிஸ் கட்சி, சீமான்கள் கையிலும், பூமான்கள் கையிலும் சிக்கி தங்கள் இஷ்டம் போல் காரியமாற்றுவதை மாற்றி பக்களின் நன்மைக்கான வகையில் பணியாற்ற வேண்டுமென்று பெரியார் ராமசாமி நினைத்தார். அப்போது பெரியாருடன் என் போன்ற வாலிபப் பட்டாளங்கள் அவர் பின்னுலே இருந்தோம். சேலத்திலே கூடினேம் ஆலோசனைகள் செய்து ஜஸ்டிஸ் கட்சியின் பெயரை திராவிடர்க் கழகம் என மாற்றினேம், மிட்டா, மிராசு, ஜமீன்தார்கள் அந்தக் கட்சியில் இருப்பதை விரட்டியடிப்பதற்காக பட்டம் பதவிகள் விரும்புவோர் கட்சியிலிருக்கக் கூடாதென தீர்மானம் செய்து அவர்களை விரட்டினேம்.

இந்த அரசியல் வரலாற்றை அறியாத காமராசர் திராவிட நாட்டுப் பிரச்சனை கோபத்தால் எழுந்தது என்று கூறுகிருர். இதிலிருந்து இந்த நாட்டு அரசியல் எப்படி இருக்கிறதென்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

நாம் கூறிவரும் திராவிட நாட்டுப் பிரச்சனையை ஆதாரங்களோடும் வரலாற்றுச் சான்றுகளோடும் கூறி வருகிறேம், இதைப் படித்தவர்கள் விவாதிக்க விரும்பினுல் விவாதத்திற்கு நாம் எப்பொழுதும் தயாராக இருக்கிறேம்.

முதலமைச்சர் காமராசர் ஒரு கூட்டத்தில் பேசுகின்ற பொழுது அண்ணுத்துரை நான் கல்லூரியில் சேர்ந்து படிக்கவில்லை யென்று கூறியிருக்கிருர்!

நான் அது போன்று எப்பொழுதும் பேசியதில்லை. பேசவும் மாட்டேன் நான் செய்த குற்றம் கல்லூரிக்குப் போனது தான்—நான் கல்லூரியில்போய் படித்ததால் தான் பல நாட்டு வரலாற்றையும் நம் நாட்டு வரலாற்றையும்—பூகோளத்தையும் படித்ததால் தான் நான் இன்று நம்முடைய நாட்டைப் பற்றிப் பேச முடிந்தது! நான் கல்லூரியில் படித்த போது சரித்திரம் படித்தேன், பொருளாதாரம் கற்றேன் விஞ்ஞானம் கற்றேன், அவைகளை சிந்தனை செய்தேன் என் சிந்தனையில் ஏற்பட்ட பயன் தான் இன்று நான் நாட்டுப் பிரிவினையைப் பற்றி பேச முடிகிறது நான் படித்த வரலாற்று ஆதாரங்களை வைத்துத் தான் நான் இன்று பேசி வரும் கொள்கைகளை ஆதாரத்துடன் விளக்க முடிகிறது.

நான் சீ. ஆர் சீனிவாச அய்யரால் எழுதப்பட்ட சரித்திரத்தைப் படித்தேன். அனந்த நாராயண அய்யரால் எழுதப்பட்ட பொருளாதாரத்தைப் படித்தேன். யசனேஸ்வர சர்மாவால் எழுதப்பட்ட விஞ்ஞானத்தைப் படித்தேன். டி. ஆர். சேஷாத்திரி அய்யரால் இயற்றப்பட்ட பூகோளத்தைப் படித்தேன். அவைகளெல்லாம் என் மனதில் பதிந்து என்னை இந்த நிலைக்கு ஆளாக்கியது. இது என் குற்றமல்லவே. பாடத் தெரிந்த வித்வான் பாடிக்கொண்டேயிருப்பான். அதைப் பார்த்து பாடத் தெரியாதவன் பொருமைப்பட்டால் என்ன செய்வது. நான் படித்த உண்மைகளை, மற்ற நாட்டு சான்றுகளை வைத்தே திராவிடநாட்டுப் பிரச்சனைப் பற்றி பேசுகிறேன்

காமராசர் கல்லூரி சென்று படிக்காததால் அவர் எப்படி வேண்டுமானுலும் பேசலாம். நான் அப்படிப் பேச முடியாது.

இந்தியா ஒரே நாடு என்பதை திராவிடர்முன்னேற்றக்கழகம் ஒப்புக் கொள்ளவில்லை.

இந்தியா ஒரே நாடாக என்றும் இருந்ததில்லை. அப்படிக் கூறுவது இட்டுக் கட்டிக் கூறுவதாகும் என்று கூறுகிறது.

காங்கிரஸ் கட்சி இதுவரை இந்தியா ஒரே நாடு என்பதற்கு எந்தவித ஆதாரமும் கூற வில்லை

திராவிடமுன்னேற்றக் கழகம் திராவிடநாடு தனியாகப் பிரிந்து வாழமுடியும். அதனுடைய வளமும், திராவிட நாடு பிரிந்து வாழ்வதற்கான ஆதாரங்களையும், பல சான்றுகளையும் கூறியிருக்கிறது.

இந்த வட்டாரத்திலுள்ளவர்கள் பல விடுதலை இயக்கத்தில் பங்குகொண்டிருந்திருக்கிருர்கள் அவர்களை எங்களது விடுதலை இயக்கத்தில் பங்கு கொண்டு நாட்டு விடுதலை இயக்கத்தை ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் இயக்கம் ஒரு தேசிய விடுதலை இயக்கம் அந்த இயக்கமும் நாட்டை வடவர்களிடமிருந்து விடுவிக்க வேண்டுமென்று சொல்லி வருகிறது.

இன்று நமது நாட்டையும், நாட்டு மக்களையும் வடவர்கள் அடிமைப் படுத்தி வருகிருர்கள், வடவர்களிடமிருந்து நாட்டை விடுவிக்கும் பாசறையில் இங்குள்ளோரையும் சேர்ந்து பாடுபடும்படி கேட்டுக் கொள்கிறேன். அதற்கு ஆதரவு தரும்படி இவ்வட்டத்து படித்த மக்களை கேட்டுக் கொள்கிறேன்.

நாங்கள் கூறும் ஆதாரங்களில் தவறு இருந்தால் அடுத்த கூட்டத்தில் அதற்கு மறுப்பு கூறும் படியும் கேட்டுக் கொள்கிறேன்.

இன்று ஆளும் கட்சியாக உள்ள காங்கிரஸ் எதிர் கட்சிகளுக்கு பதிட்டளிப்பதில்லை.

எதிர் கட்சிகளுக்கு இருக்க வேண்டிய மரியாதை கொடுக்க வில்லை.

எதிர் கட்சிகள் இருக்க வேண்டுமென்றும். ஜனநாயக முறையில் ஆட்சி புரிந்து வருவதாகவும் கூறி வருகிருர்கள் ஆனல் ஜனநாயக முறையில் இயங்கி வரும் எதிர் கட்சிகளை ஒப்புக்கொள்வதில்லை. அது கூறி வரும் முறைபாடுகளைச் சிந்தித்துப் பார்ப்பதில்லை. அந்தக் முறைபாடுகளை ஏற்றுக் கொள்வதுமில்லை.

இந்த நாட்டிலுள்ள எதிர் கட்சிகள் எதையும் குற்றம் கூறி அலட்சியப் படுத்தி வருகிருர்கள்.

ஒரு வீட்டில் ஐந்து பெண்கள் இருந்து வருகிருர்கள். அவர்கள் கல்யாணத்திற்கு ஏற்ற வகையில் இருக்கிருர்கள். அவர்களை பெண் பார்க்க வருகிருர்கள்.

முதல் பெண்ணைக் காட்டினுல் அது மாநிறமாக இருக்கிறது அது பிடிக்கவில்லை என்கிருர்கள்.

இரண்டாவது பெண்ணை காட்டுகிருர்கள், சிவப்பாக இருக்கிறது. ஆனல் அது மாறு கண் அதுவும் பிடிக்க வில்லை என்கிருர்கள்.

மூன்ருவது பெண்ணைக் காட்டுகிருர்கள் அதனுடைய கண் செந்தாமரைபோல் இருக்கிறது கால் ஊனம். அது பிடிக்க வில்லை என்கிருர்கள்.

நான்காவது பெண்ணையும் காட்டுகிருர்கள், கால்கள் நன்ருக இருந்தாலும் அது பின்னிப் பின்னி நடக்கிறது.

ஐந்தாவது பெண்ணைக் காட்டுகிருர்கள், அது பஞ்சத்தில் அடிப்பட்ட மாதிரி இருக்கிறது அதவும் பிடிக்க வில்லை என்கிருர்கள்.

இதிலிருந்து என்ன தெரிகிறது. அவன் வேறு இடத்தில் ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிருன் என்பதைத் தான் காட்டுகிறது.

அதுபோன்றுதான் இன்று எந்த எதிர்கட்சியைக் காட்டினுலும் அதில் இன்ன குறை. இதில் இன்ன குறை என்று கூறி ஒதுக்குகிருர்கள். எந்தக்கட்சியும் நல்ல எதிர்கட்சிகளில்லை என்று கூறிவருகிருர்கள்.

நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம் எதிர் கட்சி என்ருல் அதற்குக் கொள்கை இல்லை என்று கூறி அலட்சியம் செய்கிருர்கள்,

நமது கழகம் சென்ற பொதுத் தேர்தலில் ஈடுபட்டது, ஆனல் காங்கிரஸ் கட்சிக்கு பலமான போட்டி யிட்டோம் பதினேழு இலட்சம் ஓட்டுக்களைப் பெற்றேம் பதினைந்து இடங்களைப் பெற்றேம் பாராளு மன்றத்திற்கு இரண்டு பேரை அனுப்பினேம்.

தலைநகரமான சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தலில் நாற்பத்தைந்து பேர்கள் வெற்றி பெற்றேம். நகர மன்றத்தின் நிர்வாகத்தை ஏற்றேம். அங்கே நமது மேயர் இருக்கிருர்,

நம்மைப்பார்த்து காமராசர் கூறுகிருர். நமக்கு கொள்கையில்லை யென்றும், அரசியல் அப்பாவிகள் என்றும், பத்திரிகை விற்பனை இல்லையென்றும் அதனுல் அரசியல் கட்சி நடத்துகிறேம் என்றும் கூறியிருக்கிருர்.

ஆனல இவர்கள் வெளியிடும் பத்திரிகை விற்பனையாகாது திருப்பிவந்துவிடுகிறது போலும் அதை கொத்தவால் சாவடி கடைகளில் போடுகிருர்கள் என்று தெரிகிறது. எங்களைத் தான் எதிர்கட்சியென்று மதிக்காமல் ஒதுக்குகிருர்கள்.

அகில இந்தியக் கட்சியான சோஷலிஸ்ட் கட்சியை ஏன் எதிர்கட்சியாக ஏற்றுக் கொள்ள மறுக்கிறீர்கள் அதையாவது ஏற்றுக்கொள்ளுங்கள் என்ருல் அது கொள்கையற்றகட்சி அதை எப்படி எதிர்கட்சியாக ஏற்றுக் கொள்வதென்று கேட்கிருர்கள்.

அந்தக் கட்சியைத் தான் அப்படிக் கூறி விட்டார்கள் பிரஜா

(10-ம் பக்கம் பார்க்க)

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இப்படியெல்லாம் எழுதுவதால் ஒரு பெரிய, பிரமாதமான நிகழ்ச்சி நடைபெற்று விட்டதாக யாரும் எண்ண வேண்டாம்! ஆனால் நாமிருக்கும் நிலைக்கு, நாம் பெற்றுள்ள சக்திக்கு, கொண்டுள்ள கொள்கைக்கு, நாம் கொண்டுள்ள இலட்சிய பயணத்திற்கு இந்த நிகழ்ச்சி கூட நடைபெறக் கூடாது என்பது தான் நமது பெரும் ஆசையாகும்!

நமது பொதுக் குழு உறுப்பினர்கள்—யுத்த காலத்தில் பணிபுரியும் இராணுவ வீரர்களைப் போல் மிக்கக் கட்டுப்பாட்டோடு பணிபுரிய வேண்டும்! பொதுச் செயலாளர் ஜனநாயகப்படி தேர்ந்தெடுக்கப்பட்டாலும் அவர் சேனாதிபதியைப் போல் நின்று செயலாற்ற வேண்டும்!

ஆங்காங்குள்ள கிளைக் கழகத் தோழர்கள் இனியேனும் பொறுப்புள்ளவர்களை—கட்சியின் அனுபவம், கட்சிக்கு ஆற்றிய தொண்டு, தியாகம்—முன் பின் அரசியல் தொடர்பு முதலியவற்றை ஆராய்ந்து பொறுப்புள்ள பதவிகளுக்கு அனுப்ப வேண்டும்! எல்லாவற்றையும்விட இது மிக மிக முக்கியமானது என்பதை கழகத் தோழர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்!

சுற்றி வளைத்துச்சொல்லுவதைவிட அறிஞர் அண்ணா அவர்கள் கூறியது போல் நாம வேவுகாரர்களாக இருக்க வேண்டும்! மாற்றார்களுக்கு, எந்த சந்தர்ப்பத்திலும், எந்த சூழ்நிலையிலும், எந்த நெருக்கடியான கட்டத்திலும் வேவுகாரர்களாக மாறிவிடக் கூடாது!

நமது சொல்லின் செல்வர் சம்பத் அவர்கள் இந்தியை எதிர்த்து தமிழகமெங்கும் போர்ப்பறையறைந்து வருகிறார்! இந்தி வெறியர்களின் கொடுமைகளைப் பற்றி விவரிக்கும் போது நம்முடைய தோள்களெல்லாம் விம்முகின்றன! "நமக்கேன் அந்த வெறி உண்டாகக் கூடாது" என்று கூட எண்ணத் தோன்றுகிறது!

என்றும் போல் இல்லாமல் ஜனாதிபதியின் ஒப்புதலோடு சட்ட பூர்வமாக இந்தி ஆட்சி மொழியாகி விட்டது! இதை எதிர்த்து பெரும் போராட்டத்தைத் துவக்க வேண்டியது நம்முடைய கடமையாகும்!

இனி சாதாரண கிளர்ச்சிகளால், மறியல்களால் இந்தியை ஒழித்துவிட முடியாது! அந்த நிலை எப்போதே மாறி விட்டது!

இனி இந்தியை ஒழிக்க வேண்டுமானால் மிகப் பெரிய போராட்டத்தைத் தான் நடத்த வேண்டும்! ரத்தத்தை வெள்ள மாக்கிக் காட்ட வேண்டும்' பிணங்களை படிகட்டுகளைப் போல் அடுக்கித் தர வேண்டும்! இதற்கு நாம் நம்மைத் தயார் செய்து கொள்ள வேண்டும்! இந்த போராட்டமே இறுதிப் போராட்டமாக இருக்கும், திராவிடத்தின் விடுதலைப் போராட்டமாகவும் இருக்க வேண்டும்!

இதைப் பற்றியெல்லாம் பொதுக்குழு நல்ல முடிவெடுக்க வேண்டும்!

இன்றுள்ள எல்லா பிரச்சினைகளையும் கூர்ந்து கவனித்து, சமுகத்தின் சிறப்பை, வளப்பை, வலிவை, பொலிவை நாட்டிற்கு உணர்த்திக் காட்ட வேண்டும்!

நாடும், நாட்டு மக்களும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் இந்த நிலையை நாம் நிச்சயமாகச் செய்யவேண்டும்!

நாம் ஒன்றை மட்டும் நிச்சயமாக கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்! எந்த தலைமுறைக்கும் கிடைக்காத ஒரு தலைவரை, எந்த கட்சிக்கும் கிடைக்காத ஒரு மேதையை—இனி எப்போதும் பெற முடியாத ஒரு அறிவுலக மேதையை நாம் பெற்றிருக்கிறோம்! அவர் காலத்தில் தான் நாம் விமோசனம் அடைய முடியும்! அந்த ஆற்றல் மிக்க அறிவு தெய்வத்தின் கட்டளையால் தான் நாம் விடுதலை பெற முடியும்! இதை ஒவ்வொருவரும் உணர்ந்து பணிபுரிய வேண்டும்!

சில்லறைகள் எடுபிடிகள் செய்திடும் விஷமத்தனத்திற்குப் பலியாகாமல் கொள்கை ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு எங்கள் உயிரைத் தத்தம் செய்து கொடுத்தேனும் நாட்டை மீட்டிட முன் வரவேண்டும்!

அத்தகைய சூழ்நிலையை பொதுக் குழுவும் உருவாக்கித் தர வேண்டும்!

(அண்ணா பேச்சு]
(9-ம் பக்கத் தொடர்ச்சி)

சோஷலிஸ்டு கட்சியையாவது எதிர்க்கட்சியாக ஏற்றுக் கொள்ளுங்கள்,

அந்தக் கட்சித்தலைவர் ஜெயப்பிரகாஷ் நாராயணன் இந்தியாவின் பிரதமர் நேருவுக்கு வழி காட்டி அதையேன் எதிர்க் கட்சி என்று ஒப்புக் கொள்ளக் கூடாது என்று கேட்டால், அந்தக் கட்சிக்கு ஆகஸ்டிலிருக்கும் கொள்கை செப்டம்பரில் இல்லை, செப்டம்பரில் இருக்கும் கொள்கை அக்டோபரில் இல்லை என்று கூறி மறுக்கிறார்கள்!

அந்தக் கட்சியைத் தான் அப்படிக் குறை கூறி விட்டீர்கள் உலகமெல்லாம் பலம் வாய்ந்த கட்சி என்றும், உலகத்திலுள்ளோரெல்லாம் கண்டு மிரளும் கம்யூனிஸ் கட்சியையாவது ஏற்றுக் கொள்ளுங்கள் என்றால், அந்தக் கட்சிக்கென்று சொந்தக் கொள்கையில்லையென்றும், மாஸ்கோவின் அடிமைகள் என்றும் சைனாவை ஆதரிக்கிறார்களென்றும் கூறி அந்தக் கட்சியையும் மறுக்கிறார்கள்.

அந்தக் கட்சியைத் தான் எதிர்க்கட்சி யென்று ஏற்றுக் கொள்ளவில்லை.

உங்களோடு கூட இருந்து காங்கிரஸ் வெற்றிக்காக அல்லும் பகலும் பாடுபட்டவர், உங்களால் நன்கு மதிக்கப்பட்டவர், வேதாகமங்களை நன்கு பயின்றவர், உபநிஷித்துக்களை உபதேசித்து வருபவர் காந்தியாரின் சம்மந்தி அது மட்டுமல்ல! சென்னை சட்ட மன்றத்தில் கம்யூனிஸ்ட் கட்சி அதிகமாக உறுப்பினர்கள் வந்து விட்டார்கள், அவர்கள் ஆட்சிக்குவந்து விடுவார்களென்றஞ்சி அவரிடம் ஓடோடிச்சென்று நீங்கள் இந்த நேரத்தில் ஆதரிக்க வேண்டும். நீங்கள் பதினோருவது அவதாரம் ஆபத்து காலத்தில் உதவும் ஆபத்பாந்தவர் ஞானாசிரியர், என்றெல்லாம் கூறி மந்திரி பதவியிலமர வைத்த ஆச்சாரியாரால் ஆரம்பிக்கப்பட்ட சுதந்திரக் கட்சியையாவது எதிர் கட்சியென ஏற்றுக் கொள்ளுங்கள் என்றால் "சேச் சே, சேச் சே பல் போன கிழவர்கள் ஏற்படுத்திய கட்சியாயிற்றே, அதை எப்படி எதிர்கட்சி என்று ஏற்றுக் கொள்வதென்று சொல்லி விடுகிறார்கள்.

அது தான் போகட்டும், எங்களையெல்லாம் விட்டுவிட்டு, தேர்தல் வரும் போதெல்லாம் உங்களுக்காக வேலை செய்து, நீங்கள் வெற்றி பெற வேண்டுமென்று அல்லும் பகலும் கிராமம் கிராமமாகச் சென்று ஓட்டு வாங்கிக் கொடுத்தாரே பெரியார் அவரது கட்சியாகிய திராவிட கழகத்தையாவது நீங்கள் எதிர்கட்சி என்று ஏற்றுக் கொண்டீர்களா அது தான் போகட்டும்.

திருப்பதியில் உரிமையும், இமயத்தில் உரவும் கொண்டு பணியாற்றி வரும் எனது அருமை நண்பர் ம. பொ. சிவஞானம் அவர்கள் கட்சியாகிய தமிழரசு கட்சியை எதிர்கட்சியாக ஏற்றுக் கொள்ளுங்கள் என்றால் அதையும் ஏற்றுக் கொள்ள மறுக்கிறீர்கள்! திருத்தணி தமிழகத்தோடு சேர்ந்த போது வெற்றி விழா கொண்டாடிய காலத்தில் நிதி அமைச்சர் சுப்ரமணியம், நண்பர் சிவஞானம் அவர்களைப் பார்த்து நீங்கள் கோரி வந்த திருத்தணி தமிழகத்தோடு விட்டது சேர்ந்தது இனி தமிழரசுக்கழகம் தேவையில்லை அதைக் கலைத்து விட்டு காங்கிரசில் வந்து சேர்ந்து விடுங்கள் என்று பேசியிருக்கிறார்!

நான் ஆளும் கட்சியை கேட்க ஆசைப்படுகிறேன். நீங்கள் எதிர் கட்சிகள் வேண்டாம் என்று எண்ணுவதானால், அவைகள் இருப்பதனால் உங்களுக்குத் தொல்லைகள் ஏற்படும் என்று நினைப்பீர்களானால், தைரியமாக "எதிர் கட்சிகளே இருக்கக் கூடாது, அவைகள் வேண்டாம்" என்று சொல்லி விடுங்களேன்.

வெளியிலே ஜன நாயகம் பேசுவது, உள்ளுக்குள் எதேச்சாதிகாரமாக எதிர்க்கட்சிகளை அடக்குவது என்றால் இது நேர்மையாகாது நீதியாகாது.

ஆளும் கட்சியை நல் வழிப் படுத்தி அதை மக்களுக்கு தொண்டு செய்வதற்காக ஒரு பலம் வாய்ந்த எதிர் கட்சி தேவை என்று பேசி வருகின்ற அமைச்சர்கள் அதே நேரத்தில் மக்களின் செல்வாக்கைப்பெற்று மக்களுக்காக உழைத்து வருகின்ற எதிர் கட்சிகளை அலட்சியப்படுத்தி அவைகளை ஒழிக்க திட்டமிட்டு வருகிறார்கள், ஆண்மையில் நம்பிக்கை இருந்தால் அமைச்சர்கள் இரண்டில் ஒன்று செய்யட்டும்.

(தொடரும்)

அடுத்த வாரம்

அறிஞர் அண்ணா அவர்கள் 30—5—60ம் தேதி அன்று திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில் அருகில் பேசிய சொற் பொழிவு விரிவாகப் போட நினைத்து முழுசொற்பொழிவு அப்படியே எழுதி இருந்தோம். இவ்வாரம் இடமின்மையால் முற்பகுதி மட்டும் பிரசுரித்திருக்கிறோம். அடுத்த வாரம் அந்த சொற்பொழிவின் தொடர்ச்சியும், 31—5—60ம் தேதி ராயபுரத்தில் அண்ணா முழக்கிய போர் முரசு சொற் பொழிவும் முழுமையும் வெளிவரும்.

வடநாட்டு ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நாட்டை மீட்க காசுகள் தாரீர்!

(கருணாநிதி பேச்சு)

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல் செலவுகளுக்கு தாருங் என்று கேட்கிறோம்.

ஆனால் இன்று நமது மாநில அமைச்சர்களுக்கு 1962-ம் ஆண்டு ஒரு வேதனையாகி விட்டது. இன்று அமைச்சர்களெல்லாம் சூறாவளி சுற்றுப்பயணம் செல்லஆரம்பித்து விட்டார்கள்.

நமது மாநில நிதி அமைச்சர் சுப்பிரமணியம் சென்னையிலுள்ள பணக்கரார்களையும் படாதிபதிகளையும் அழைத்துப் பேசி இருக்கிறார், அவர்களை மிரட்டி இருக்கிறார் காங்கிரஸ் வாழ்ந்தால் நீங்கள் சுகமாகவாழ முடியும், காங்கிரஸ் இல்லையென்றால் நீங்கள் இருக்கமுடியாது. உங்கள் தலை தப்பவேண்டுமானால் தேர்தல் நிதிக்குப் பணம் கொடுங்கள். 40 லட்சம்ரூபாய் நீங்கள் கொடுக்கவேண்டுமென்று கேட்டிருக்கிறார். அவர்கள் ஒரு இலட்சம் தருவதாக வாக்களித்துள்ளார்கள்.

வரும் தேர்தலில் நம்மை தோற்கடிக்க வேண்டுமானால் பணத்தைவைத்துத்தான் தோற்கடிக்க முடியும் என்று அவர்கள் நினைத்து விட்டார்கள்

காமராசர் மதுரை ஜில்லாவுக்குச் சென்றார் அங்கு மில் முதலாளிக்கும் மிராசுதாரர்களுக்கும் பெரிய பெரிய வியாபாரிகளுக்கும் அழைப்பு அனுப்பினார் 800பேர்களுக்கு அழைப்பு அனுப்பியதில் 300 பேர்கள் தான் வந்திருந்தார்கள்

முதலமைச்சர் காமராசர் அவர்களை பயமுறுத்தினார் காங்கிரஸ் வெற்றி பெறுவிட்டால் பணக்காரர்கள் வாழமுடியாதென்று மிரட்டினார் தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெறுவதற்காக பல லட்சம் ரூபாய்கள் தேவை என்று கேட்டார் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றிபெற்றிபெற்றால் அதனால் பணக்காரர்களுக்கு வரும் தீமைகளை எடுத்து அச்சம் காட்டினார் அவர்களும் லட்சக்கணக்கான பணம் தருவதாக வாக்களித்து விட்டார்கள்.

பஞ்சாலைகளும், பல தொழில் ஸ்தாபனங்களும் அதிகமாக உள்ள கோவை மாநகருக்கு தொழிலமைச்சர் வெங்கிட்டராமன் சென்றார் அங்குள்ள மில் முதலாளிகளையும் தொழிலதிபர்களையும் அழைத்தார் அவர்களை பயமுறுத்தினார் எதிர்கட்சிகள் வெற்றி பெற்றால் நீங்கள் வாழ முடியாது நீங்கள் வளமுடன் வாழ வேண்டுமானால் காங்கிரசை வெற்றிபெறச் செய்ய வேண்டும் காங்கிரஸ் வெற்றி பெறுவிட்டால் நீங்கள் ஆலையிட்டகரும் பாகி விடுவீர்கள் என்றெல்லாம் கூறிய தோடு பஞ்சாலை தொழிலாளர்களின் பூசல்களையெல்லாம் கூறி அச்சுறுத்தி இருக்கிறார், காங்கிரஸ் தேர்தல் நிதிக்குப் பணம் தர வேண்டுமென்றும் கேட்டிருக்கிறார் அவர்களும் பணம் தருவதாக வாக்களித்திருக்கிறார்கள்.

ஆகவே இன்று காங்கிரஸ் கேட்டால் அள்ளிகொடுப்பதற்கு அங்கே குபேரர்கள் இருக்கிறார்கள்,

கமாராசரின் கண்அசைவு கொடுத்தால் இந்தா பணம், இந்தா பணம் என்று வாரிக் கொடுக்கும் இலட்சாதிபதிகள் அங்கே இருக்கிறார்கள், நிதியமைச்சர் சுப்பிரமணியம் 'பணம் வேண்டும்'' என்று குபேரர்களைப் பார்த்து சுட்டுவிரலை அசைத்தால் அள்ளி. அள்ளிக்கொடுக்கும் கோமான்கள் அங்கே இருக்கிறார்கள், மந்திரி வெங்கிட்டராமன் வீரப்பார்வை பார்த்து கை நீட்டினால் ''தந்தோம், தந்தோம் பெற்றுக் கொள்ளுங்கள் என்று பணத்தை வீசித்தரும் கோடீஸ்வரர்கள் அங்கே இருக்கிறார்கள் ஐஸ்வரியச் சீமை அங்கேஇருக்கிறது லட்சக்கணக்கில் வாரித்தரும் முதலாளிகள் அங்கே அந்தப் பணங்களைக் கொண்டு தேர்தலில் நம்மை வீழ்த்த காங்கிரஸ் முனைந்திருக்கிறது ஆனால் நம்மிடமோ, ஒட்டிய வயிரும் குழிவிழுந்த கன்னங்களும், இருளடைந்த கண்களும். கொண்ட ஏழைகள். பாட்டாளிகள் பஞ்சைகள் இருக்கிறார்கள். அவர்கள் கையில் பணமில்லை. அவர்கள் நெஞ்சில் உயர்ந்த கொள்கைகள் உயிரினும் மேலான லட்சியங்கள் நம் பொன்னாடாம் திராவிடநாடு விடுதலையடைய வேண்டுமென உணர்ச்சிஇத்தனையும் கொண்டவர்கள் இங்கே இருக்கிறார்கள்.

''திராவிடநாடு திராவிடர்க்கே'' என்ற அந்த உன்னத கொள்கையை தாங்கி நிற்கும் வீர இளைஞர் பட்டாளம் இங்கே இருக்கிறது. அவர்களது ஆதரவால் பாசத்தால் நமது கழகம் வளர்ந்து வருகிறது. மக்களுடை அன்பையும் பாசத்தைதையும் கொண்டு வளர்ந்து வரும் நமது கழகத்தை பணத்தாலடிக்க பதவியிலிருப்போர் கச்சை வரிந்து நிற்கிறார்கள்.

இங்குள்ளவர்களிடம் செல்வம் இல்லை. இலட்சம் தெரியாது இங்குள்ளோருக்கு கோடி தெரியாது இங்குள்ளோருக்கு அந்த கோடிக்கு பதில் தெருக் கோடி தெரிந்தவர்கள் தான் இங்குள்ளோர் இருக்கிறார்கள்!

ஆனால் தெருக் கோடியிலே, முச்சந்தியிலே, தெருவிலே நின்று ''ஏ ஆணவப் பிடித்த ஏகாதிபத்தியமே திமிர் பிடித்த ஆட்சியே எனக்குத் தேவை எனது இன்பத் திராவிட நாடு அதை அடைவதற்காக எந்த வித இன்னல்களையும் தியாகத்தையும் ஏற்கத் தயாராக இருக்கிறேன்! அதனால் எனது இன்னுயிர் போவதானாலும் அஞ்சேன் தூக்கு மேடை ஏறு என்ற இந்த ஆணை சர்க்கார் உத்திரவிட்டால் உள்ள மகிழ்ச்சியோடு அகமகிழ்வுடன் தூக்கு கயிற்றை முத்த மிட்டு தூக்கு மேடை யேறவும் தயாராக இருக்கிறேன். அட்டித் தூக்கு மேடை யேறி ஆணவம் பிடித்த அக்கிரம அரசினர் தங்கள் ஆணையால் எனது இன்னுயிர் பறிக்கப் பட்டால் எனது உடல் வெட்டப்பட்ட அந்தப் படுகுழியில் தள்ளப்பட்டால் எனது சவத்தை அமைக்கப்பட்டிருக்கும் சவக் குழியில் வைக்கப்பட்டால் அங்கு வந்து சவக்குழியில் நின்று எனது சந்ததியினர் நாட்டுக்காக உயிரைப் பலி கொடுத்த உத்தமனே என்று வாழ்த்தி வர வணக்கம் செலுத்துவார்கள் என்று எக்காளமிடும் ஏராளமான ஏழை வாலிபர்கள் எங்களிடமிருக்கிறார்கள், அவர்கள் கையிலுள்ள சிறு காசுகளை தந்து கொள்கையை நிறைவேற்றும் வீரம் படைத்த வீரப்பட்டாளம் இங்கே இருக்கிறது.

நாம் சிறு சிறு காசுகளைச் சேர்க்கிறோம். அவர்கள் லட்சம் லட்சமாகச் சேர்க்கிறார்கள்!

நாம் சிறு, சிறு காசுகளாகச் சேர்க்கிறோம். 'இந்தா! இந்தச் சிறு காசுகள் தான் இருக்கிறது' என்று நம்மிடம் மக்கள் கொடுக்கும் சிறு தொகையை வைத்துத்தான் நாம் தேர்தலில் ஈடுபடப் போகிறோம்.

அந்தத் தேர்தலில் பலமான பரீட்சை நடக்கப் போகிறது.

கோடீஸ்வரர்களிடமும் லட்சாதிபதிகளிடமும் சேர்த்த பணமும் ஏழை எளியவர்களிடம் சேர்த்து வைக்கும் சிறிய பணமும்தான் தேர்தலில் சந்திக்கப் போகிறது லட்சமும் காசுகளும் மோதப் போகிறது. அப்போதுதான் நாடு தெரிந்துக் கொள்ளப்போகிறது.

லட்சம் வெற்றிப் பெறுகிறதா லட்சியம் வெற்றி பெறுகிறதா? கோடி வெற்றிப் பெறுகிறதா? கொள்கை வெற்றிப் பெறுகிறதா? அண்ணாவின் அறிவு கொள்கைக்கு நாட்டு மக்களிடம் ஆதரவு இருக்கிறதா! நாட்டைப் பிணக்காடக்கும் ஏகாதிபத்திய வெறியர்களுக்கு ஆதரவு இருக்கிறதா என்பதை நாடு தெரிந்து கொள்ளத்தான் போகிறது.

நமது தலைவர்—அறிவுப் பெருந்தகை—பேறறிஞர் அண்ணாஅவர்கள் வீட்டுக்கொரு உண்டியல் வைத்து காசுகள் போட்டு தேர்தல் நிதி தாருங்கள் என்று கேட்கிறார். இந்தப் பணம் எதற்கு) ஓட்டுக்குக் கொடுப்பதற்காக நாம் பணம் கேட்கவில்லை. பின் ஏன் கேட்கிறோம்.

காங்கிரஸ்காரர்கள் அமைச்சர்கள் ஜீப்களிலும் கார்களிலும் சென்று திருநெல்வேலி. தூத்துக்குடி முதலிய இடங்களுக்கும். கிராமங்களுக்கும் சென்று பணம் கொடுத்து ஓட்டுக் கேட்கிறார்கள் என்றால் நாம் ஜீப்களிலோ கார்களிலோ அந்த மக்களிடம் சென்று ''நீங்கள் பணம் வாங்கி ஓட்டுப் போடாதீர்கள் இந்த மாபாவிகள் நம்முடைய நாட்டையும் வடநாட்டாருக்குக் காட்டிக் கொடுப்பதற்கு, நம் நாட்டு மக்களை அடிமைப் படுத்துவதற்கு உங்களிடம் ஓட்டுக் கேட்கிறார்கள் நீங்கள் இந்தப் பாப காரியத்திற்கு உதவாதீர்கள். பாதகம் செய்யும் இந்த பாபிகளை விரட்டியடியுங்கள்'' என்று கேட்பதற்கே உங்களிடம் பணம் கேட்கிறோம்.

நாம் ஜீப்களிலே போவதானால் தண்ணீர் ஊற்றிக்கொண்டு போக முடியாது, அதற்கு பெட்ரோல ஊற்றவேண்டும் அதற்கு நமக்குப் பணம் தேவை அதற்காகத்தான் உங்களிடம் பணம் கேட்கிறோம், அதற்குக் கூட நாம் செலவழிக்காவிட்டால் அவர்களுடன் போட்டியிட முடியாது ஆகவே நீங்கள் நமது அறிஞர் அண்ணா அவர்கள் எண்ணம் நிறைவேற உண்டியலில் காசு சேர்த்து நிதி கொடுங்கள். அப்பொழுது தான் இன்றுள்ள அடிமை ஆட்சியை அகற்ற முடியும்!

நீங்கள் வீட்டில் வைத்திருக்கும் உண்டியலில் பணம் நிரப்பி விட்டால் இந்த தர்மாம்பாள் மன்றத்தார் வைத்திருக்கும் பெரிய உண்டியலில் காசு போட்டு நிரப்புங்கள் அப்படி நீங்கள் 1962 வரை உண்டியலில் பணம் போட்டு சேர்த்தால் ஏராளமான பணம் சேர்ந்து விடும்,

இந்த விழாவை நடத்தும் தோழர்கள் கூறினார்கள் நாங்கள் அடுத்த ஆண்டிற்குள் இரண்டாயிரம் ரூபாய் உண்டியல் மூலம் சேர்த்துத் தருகிறோம் என்ற உறுதி கூறினார்கள்,

அடுத்த ஆண்டு இங்கு நடக்கும் கூட்டத்தில் ''எங்கே இரண்டாயிரம் என்று'' கேட்டால் இதோ இரண்டாயிரம் என்று காட்டினால் மாற்றார் என்ன நினைப்பார்கள்.

இதைப் பின் பற்றி எல்லா வட்டங்களும் உண்டியலில் பணம் சேர்த்தால் சென்னை நகரில் மட்டும் அடுத்த ஆண்டிற்குள் ஒரு இலட்சம் ரூபாய் சேரும். இதைப் போல் மற்ற மாநிலங்களிலும் பணம் சேர்த்தால் நமது பொன்னாடாம் திராவிட நாடு விடுதலைஅடைந்து நாம் இன்ப வாழ்வு பெறலாம்.

சென்னை இந்த உண்டியல் சேர்ப்பதில் மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டும்.

நீங்கள் என்னைப்பார்த்துத் தலையசைத்துப் பார்ப்பதிலிருந்து ஒன்று கேட்கிறீர்கள் என்று நினைக்கிறேன். ''நாங்கள் பணம் சேர்த்துக் கொடுத்தால் உண்டியலில் காசு போட்டு நிதிகொடுத்தால் இன்று சட்ட மன்றத்தில் பதினைந்து பேர்களாக உள்ளவர்களை நூற்றைம்பது பேர்களாக்கித் தருவீர்களா'' என்று கேட்பது போல் தெரிகிறது.

நான் அந்த உறுதி கொடுக்க மாட்டேன். அப்படி ஆசை வார்த்தை தரமாட்டேன், நான் கழகத்தில் பொறுப்புள்ளவனாக இருந்து வருவதால் அந்தமாதிரி ஆசை வார்த்தை கூறமாட்டேன் வேண்டுமானால் உங்களை மகிழ்விக்க—உங்களுக்கு உணர்ச்சிவர நூற்றைம்பது பேர்கள் என்ன இருநூறு பேர்களைக் கொண்டு வருகிறேன் என்றுகூறலாம் அப்படிக்கூறமாட்டேன். உங்கள் உணர்ச்சியையும், ஆர்வத்தையும் கொண்டு நூற்றைம்பது பேர்களை கொண்டு வரலாம் பதினைந்தை நூற்றைம்பதாக ஆக்கலாம் என்று மட்டும் கூறு

(12-ம் பக்கம் பார்க்க)

Registered as a News Paper in CEYLON
இலங்கையில் [illegible] சதம்
Regd. No. M. 7074 **MALAIMANI** விலை 16 காசு Phone No. 8[illegible]

இந்தி ஏகாதிபத்தியத்தை அழிக்க போர் கொடி உயர்த்துங்கள் !

(கருணாநிதி பேச்சு)
(11-ம் பக்கத்தொடர்ச்சி)

வேன். எல்லாம் உங்கள் கையில் தான் இருக்கிறது.

நமது அறிஞர் அண்ணா அவர்கள் கூறியிருக்கிறார்கள் நூற்றைம்பது பேர்கள் இல்லா விட்டாலும் இந்த பதினைந்துபேர்கள் ஐம்பது பேர்கள் இருந்தால் நான் நமது இலட்சியத்தை வெற்றிபெற செய்வேன் என்று கூறியிருக்கிறார்.

நாம் சென்னை நகராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட்டோம் பெரும்பாலான இடங்களில் நமது தோழர்களை நிறுத்தினோம் அப்போது நம்மை கேலியும் கிண்டலும் செய்தார்கள் நமக்கு ஐந்து இடங்கள் தான் கிடைக்கும் என்று சிலர் நையாண்டி செய்தார்கள் பத்து பேர்கள் தான் வருவார்கள் என்று சிலரும் கூறினார்கள் நம்முடைய தோழர்களில் பலர் நம்பிக்கையற்றுப் பேசினார்கள். நமது அண்ணா அவர்கள் நமக்கு பத்து இடங்கள் கூட கிடைக்காது என்று நம்பினார்கள் ஆனால் என்னவாயிற்று, நீங்கள் காட்டிய ஆர்வம், நீங்கள் செய்த பணி இன்று சென்னை மாநகராட்சி மன்றம் நம்மிடம் இருக்கிறது, இந்த வெற்றியை யாரும் எதிர்பார்த்திருக்கமாட்டார்கள்.

இதனால் நான் நமது அண்ணா அவர்களிடமிருந்து ஒரு கணையாழியைப் பெற்றேன். உங்களுடைய ஆதரவால் நான் கணையாழியைப் பெற்றேன். ஆகவே பதினைந்து நூற்றைம்பது ஆவது உங்கள் கையில்தான் இருக்கிறது.

நாம் திராவிட நாட்டுக் கொள்கையை மக்களிடம் கூறி வந்தோம்! அந்தக் கொள்கையை மக்கள் ஏற்றுக் கொள்[illegible]ர்களா என்று எண்ணினோம் [illegible]ந்தோம் ஆனால் மக்கள் அ[illegible] ஏற்று மாநகராட்சி மன்ற[illegible]கு நம்மை அனுப்பினார்கள் அதே போன்று தான் சட்[illegible]சபையில் நாம் பதினைந்து பேர்களாக உள்ளவர்கள் நூற்றைம்பது பேர்களாகலாம். நான் இப்படிக் கூறுவதைத் தவறாக நினைக்க வேண்டாம். நூற்றைம்பது பேர்களாகலாம்என்று தான் கூறுகிறேன்!

உங்களுக்கு ஒரு எச்சரிக்கையும் விட ஆசைப்படுகிறேன். நமது திராவிட முன்னேற்றக் கழகத்தை வீழ்த்த காங்கிரஸ்காரர்கள் பொய் பிரசாரத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். இதில் நாம் மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும், அவர்கள் பிரசசாரத்தால் இப்பொழுதுள்ள பதினைந்து பேர்கள் கூட வருவார்களா என்று கூட நினைக்க வேண்டியிருக்கிறது.

நமது திராவிட முன்னேற்றக் கழகம் சுதந்திராக் கட்சியுடன் சேர்ந்துவிட்டது என்று கூறி வருகிறார்கள். இதைப்போக்க வேண்டும் இதைப்போக்கத்தான் நமது தலைவர் உண்டியலில் காசு சேர்க்கும்படி கூறுகிறார்.

நம்மைப் பார்த்து அன்றும் கேட்டார்கள் இன்றும் கேட்கிறார்கள் சட்டமன்றத்திற்குப் போனால் திராவிடநாடு பெற்றுவிடமுடியுமா என்று நாம் சட்டசபைக்குச் செல்வது திராவிடநாடு பெறுவதற்கான ஒரு வழியே யாகும் என்று இன்றும் கூறுகிறோம், அன்றும் கூறினோம்!

சட்ட மன்றத்திற்குப் பதினைந்து பேர்கள் சென்றதால் இவர்கள் என்ன சாதித்து விடமுடியும் என்று கேட்டவர்களுக்கு சென்ற பொதுத் தேர்தல் பதிலளித்து விட்டது.

சென்ற பொதுத் தேர்தலில் நமக்கு பதினேழு இலட்சம் பேர்கள் வாக்களித்திருக்கிறார்கள்.

நாம் நமது நாடு விடுதலை அடைய வேண்டுமென்று கிளர்ச்சி செய்தோம், ஏதோ நான்கைந்து பேர்கள் கூடி கத்தி வருகிறோம் என்று கூறி வந்தார்கள். ஆனால் அவர்களே மலைத்துப் போகும்படி நமக்கு பதினேழு இலட்சம் பேர்கள் வாக்களித்தார்கள் இதன் பொருளென்ன? நம்முடைய கொள்கையை இலட்சியத்தைப் பதினேழு இலட்சம் பேர்கள் ஆதரித்திருக்கிறார்கள் என்ற பொருள் தானே இதைப் பார்த்த பின் தான் நமது அரசினருக்கு அச்சம் பிறக்க ஆரம்பித்து விட்டது, வடநாட்டிலுள்ளவர்களும் நமது வளர்ச்சியைக் கண்டு பயந்து விட்டார்கள். ஆகவே நாம் சட்ட மன்றத்திற்குச் சென்றதால் நாட்டிலுள்ளோர் அனைவரும் நமது முழக்கத்தை அறிந்து கொள்ள முடிந்தது. உலகமெங்கும் நமது இயக்கத்தை அறிந்து கொள்ளும் வாய்ப்பு நமக்குக் கிடைத்தது. சிறு துளி தான் பெரு வெள்ளமாகும்.

பலர் நம்மைப் பற்றிப் பேசும் போது கூறுகிறார்கள். இவர்கள் சட்ட மன்றத்திற்குப் போய், திராவிடநாடு பிரச்சினையைப் பற்றிப் பேசினார்களா என்று.

நாம் சட்டமன்றத்திலாயினும் சரி, பாராளுமன்றத்திலாயினும் சரி, வேறு எங்கும் நாம் சென்றாலும் நமது பேச்சு முடியும் போது திராவிடநாடு திராவிடர்க்கே என்று சொல்லித்தான் முடிக்கிறோம்.

சட்டமன்றத்தில் நமது அண்ணாவானாலும் சரி, அன்பழகனானாலும் சரி, நானானாலும் சரி எந்தப் பொருள் பேசினாலும் கடைசியில் திராவிடநாட்டைப்பற்றிப் பேசிதான் முடிக்கிறோம்.

அங்கு சென்றுள்ள பதினைந்து பேரும் அப்படித்தான் பேசுகிறோம், நமது நண்பர் சம்பத்தும் பாராளுமன்றத்தில் இதை முன் வைத்துத்தான் பேசுகிறார். எங்களுக்கு இதைத் தவிர வேறு என்ன வேலை.

நமது அண்ணா அவர்கள் பாலாற்றுத் தண்ணீர் பற்றிப் பேசும் போதும் நான் என் தொகுதியைப்பற்றிப்பேசும்போதும், இந்த மாநில சர்க்காருக்கு எந்தவிதஅதிகாரமுமில்லை டில்லியை எதிர்பார்க்கிறார்கள் இந்த நிலைமாற வேண்டும்!

நமது நாடு விடுதலை அடைந்து இன்பத் திராவிடம் பெற்றால் நமது நாட்டிற்குத் தேவையானவைகளை நாமே செய்து கொள்ள முடியும், நமது மாநில அமைச்சர்களுக்கு எந்தவிதஅதிகாரமுமில்லைஅவர்கள் எதற்கும் வடநாட்டு அமைச்சர்களிடம் ஓடுகிறார்கள். இந்த நிலை இருக்கக் கூடாது என்று பேசி வந்திருக்கிறோம்.

நமது இலட்சிய முழக்கமான திராவிடநாட்டுப் பிரச்சினையை எங்கும் முழக்குவோம்.

ஆகவே நாம் திராவிடநாட்டுப் பிரச்சினையை சந்தர்ப்பம் வாய்க்குமிடங்களிலெல்லாம் கூறியே வருவோம்.

நமக்கு முன்னைய தேர்தலில் இருந்ததைவிட இந்தத் தேர்தலில் பலமான எதிர்ப்பு இருக்கும் அன்று சந்தித்த எதிர்ப்புகளைவிட அதிகமான எதிர்ப்புகளைச் சந்திக்க வேண்டியிருக்கும்!

நமது மாநில அமைச்சர்கள் இப்பொழுதே தேர்தல் பிரச்சாரத்தை ஆரம்பித்து விட்டார்கள்.

அவர்கள் திட்டமிட்டு சுற்றுப் பிரயாணம் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். அவர்கள் பேசுகின்ற இடங்களிலெல்லாம் தேர்தல் பிரச்சாரம் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். அவர்களுக்குத் தேர்தல் கிலி ஏற்பட்டு விட்டது!

இப்பொழுது அமைச்சர்களுக்கு மக்கள் முன் பேச வேண்டுமென்ற ஆசை பிறந்து விட்டது. பொதுக் கூட்டங்களில் பேசுகிறார்கள். மக்கள் கூடினாலும் சரி, கூடாவிட்டாலும் சரி பேசுகிறார்கள், அதிகாரத்தையும், பதவியையும் கொண்டு தேர்தல் வேலை செய்ய முற்பட்டு விட்டார்கள். அதிகாரிகளின் தயவைக் கொண்டு இன்று கூட்டங்களில் அமைச்சர்கள் பேச ஆரம்பித்து விட்டார்கள்.

அண்ணாவின் அன்பு மொழியால் கட்டுண்டிருக்கும் மக்கள் கடல் எழுந்தால் மாற்றார் நிலை என்னவாகும். மக்கள் இன்று உணர்ச்சி மிகுந்து விடுதலை ஆர்வத்துடன் இருக்கிறார்கள். அந்த ஆர்வத்தை ஊட்டியவர்கள் அறிஞர் அண்ணா,

நம்முடைய தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் இதையெல்லாம் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார் அவர் அரசியலிலே தன்னிகரில்லா பெரும் மேதை, தீர்க்கதரிசி அவர் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வார், அவர் நம் கழகத்தை அழியவிட மாட்டார்.

நம்முடைய தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் காலத்தில் நாம் வாழும் பெரும் பேற்றையும், அவர் தலைமையில் பணியாற்றும் நல்லவாய்ப்பும் நமக்கு கிடைத்திருக்கிறது. யாருக்கும் எந்த கட்சிக்கும் கிடைக்காத தலைவர் நமக்கு கிடைத்து இருக்கிறார். அவர் காட்டும் அறவழியிலே நின்று நற்பணி புரிவோம்!

நம்முடைய கழகத்தில் பிளவு என்று கூறிக் கொண்டிருக்கும் பிற்போக்கு மனம் படைத்தோருக்கு நான் ஒன்று சொல்ல ஆசைப்படுகிறேன். ஒரு வீட்டில் திருமணம் நடைபெறுகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்த வீட்டில் கூச்சல்கள் நடைபெறுவது இயற்கை ஒரு பக்கத்திலே மணமக்களை வாழ்த்திக் கொண்டு இருப்பர் ஒரு சிலர். மற்றொரு பக்கத்தில் பந்தி விசாரித்துக் கொண்டு இருப்பர் மற்றும் சிலர், இன்னும் மற்றும் சிலர் மணமக்களைப்பற்றி வர்ணனை பேசிக் கொண்டிருப்பர். இதுவுமன்றி மணமகனுடைய தாயார் தனக்கு வாய்த்திருக்கும் மருமகளுக்கு அருமையான குழந்தை பிறக்க வேண்டும் அந்தக் குழந்தையைகையிலேந்தி கொஞ்சிக் குலவ வேண்டுமென்ற தன் எண்ணத்தை பலரோடு பேசிக்கொண்டு இருப்பர். இது போன்றுதான் நம்முடைய திராவிட முன்னேற்ற கழகம் ஆரம்பிக்கப்பட்டு அது மக்களின் அன்பால் வளர்ந்து நாட்டிலுள்ள பதினேழு லட்ச மக்களின் வாக்குகளைப் பெற்று அது மணவரையிலே அமர்ந்திருக்கிறது.

இந்தியக் குடியரசுத் தலைவர் ராஜேந்திர பிரசாத் இந்தியை பொது மொழியாக 1965-ம் ஆண்டு முதல் அமுல் நடத்த ஆணையிட்டு விட்டார். நாம் அதை எதிர்த்து போரிட போர்க் கொடி உயர்த்த வேண்டும். அந்தப் போர் பெரியதோர் போராட்டமாக இருக்கவேண்டும். வடநாட்டு ஆதிக்க வெறியர்கள் நம்மை அடிமைக் கொள்வதற்காகவும். நம்முடைய நாகரீகத்தையும், மொழியையும், அழித்து விட முற்பட்டு விட்டனர்.

சமீபத்தில் நடைபெறவிருக்கும் பொதுக்குழுவுக்கும் இந்தியை எதிர்த்து பெரும் போராட்டம் நடத்த வேண்டுமென்றும், அதற்கான திட்டங்களை வகுக்க வேண்டுமென்றுநானும், நண்பர் பா.உ. சண்முகமும் தீர்மானம் அனுப்பியிருக்கிறோம். அந்தப் போராட்டம் வரும்போது, நமது அண்ணா ஆணையிடும் போது பெருந்திரளாக வந்து நாம் வெற்றி பெற நல்லாதரவு நல்க உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

நாம் போர்கொடி உயர்த்தி விட்டோம். இனி அது தாழாது நமது இன்பத்திராவிட நாடு பெற்றால் தான நம் அண்ணாவின் போரிடும் வீரம் குறையும். நம் பொன்னான இன்பத்திராவிடம் பெற அயராது உழைக்கும்நமது அண்ணாவிற்கு வலிவு ஏற்பட உழைப்போம் என்று முரசு கொட்டிப் புறப்படுங்கள் என்று கேட்டு விடைபெறுகிறேன்.

வணக்கம்

★

ஆசிரியரும், வெளியிடுபவரும், அச்சிடுபவரும் பி.எஸ். இளங்கோ கல்விப் பிரகாசம் பிரஸ்,
404 திருவல்லிக்கேணிஹைரோடு, சென்னை-5 அலுவலகம்: 1-35, வாணியர் தெரு. சென்னை-14.